
விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 304 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 01 வெள்ளிக்கிழமை (18.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### நெருக்கடிகளுக்குத் தீர்வு காண
## பாராளுமன்றத்தில் அனுபவசாலிகள் அவசியம்
### ரணில் விசேட அறிக்கை



(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் முன்னோக்கி நகர்வதற்கும் தன்னுடன் இணைந்து செயற்பட்ட அனுபவசாலிகள் பாராளுமன்றத்திற்கு செல்வது அவசியம் ▷02

### இலஞ்சம், ஊழல் நாட்டை அழிக்கும்
## எனக்கும் 5 மில்லியன் வழங்க முயற்சித்தனர்
### சந்திரிகா பரபரப்புத் தகவல்



(கொழும்பு)

"நான் பிரதமராக இருந்தபோது எனக்கும் 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலஞ்சமாக வழங்க முயற்சித்தனர். அதனை நான் மறுத்துவிட்டேன்.

இலஞ்சம் மற்றும் ஊழல் முழு நாட்டையும் ▷02

### உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் அறிக்கை
# தேவைப்படும் நேரம் வெளிப்படுத்தத் தயார்
### அமைச்சர் விஜித ஹேரத்



(கம்பஹா)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை தேவையானபோது வெளிப்படுத்தத் தயார் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

### அராலியில்
## கசிப்புடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலிப் பகுதியில் கசிப்புடன் சந்தேக நபரொருவர் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

47 வயதுடைய குறித்த நபர் அரா ▷15

### பொதுத் தேர்தல்
## இதுவரை 257 முறைப்பாடுகள்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளு ▷15

### பிரதேச, கிராமிய மக்களுக்கு
## பலன்கள் கிடைக்கும் வகையில் வேலைத்திட்டங்களை தயாரிக்குக
### ஜனாதிபதி அநுர குமார



(கொழும்பு)

பிரதேச, கிராமிய மக்களுக்குப் பலன்கள் கிடைக்கும் வகையில் வேலைத்திட்டங்களைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயல ▷15

### தீர்க்கப்படாத பிரச்சினைகளை
## 24 மணிநேரமும் அறிவிக்க தொலைபேசி இலக்கங்கள்

(கொழும்பு)

மக்கள் முகங்கொடுக்கும் தீர்க்கப்படாத பிரச்சினைகளை நேரடியாக அறிவிப்பதற்காக ஜனாதிபதி காரியாலயத்தினால் 3 தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, 0112 354 550, 0112 354 354 அல்லது 0114 354 354 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மக்களுக்கு நில ▷15

## இறக்குமதி பொருட்களுக்கு வரி அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் சில பொருட்களுக்கு விதிக்கப்படும் வரியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நிதியமைச்சர் என்ற ▷15

## நிமோனியாக் காய்ச்சல் கோப்பாயில் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

நிமோனியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் நேற்று கோப்பாயில் உயிரிழந்துள்ளார்.

இதில் கோப்பாய் தெற்கு வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த காந்திபன் சுதர்சினி (வயது - 44) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பணிபுரியும் குறித்த குடும்பப் பெண் கடந்த 11 ▷15

### தேர்தலில் வேட்பாளர் ஒருவர்
## செலவழிக்கும் பணம் குறித்து விசேட அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் பிரசாரத்திற்கு செலவழிக்ககூடிய அதிகபட்ச பணம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர்களின் தகவல்களை உரிய முறையில் அறிந்துகொள்ள

## பஃவ்ரலால் விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் தகவல்களை உரிய முறையில் அறிந்துகொள்வதற்காக பஃவ்ரல் அமைப்பு விசேட வேலைத்திட்டத்தை தயாரித்துள்ளது.

எதிர்வரும் சில தினங்களுக்குள் சமூக வலைத்தளங்களின் ஊடாக அதனை வாக்காளர்களுக்காக வெளியிடவுள்ளதாக அதன் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

"உங்கள் எதிர்கால பாராளுமன்ற உறுப்பினரை அறிந்துகொள்ளுங்கள்" என்ற தொனிப்பொருளில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாட்டின் அனைத்து தேர்தல் வேட்பாளர்களின் தகவல்களையும் ஒன்றுசேர்ப்பதற்கும் அதனை சமூகத்தில் முன்வைப்பதற்குமாக இந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய வேட்பாளர்கள் தாம் தொடர்பிலும் தமது விருப்பு இலக்கம் தொடர்பிலும் பாராளுமன்ற தேர்தலில் தாம் போட்டியிடுவதற்கான நோக்கம் தொடர்பிலும் மக்களை தெளிவுபடுத்தும் வாய்ப்பு கிடைக்கப்பெறும் என அவர் கூறினார்.

வாக்காளர்கள் தமது வாக்குகளை பயன்படுத்துவதற்கு முன்னதாக தமது வேட்பாளர்கள் தொடர்பான அடிப்படை தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான ஒரு நடைமுறையாக இந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# தேங்காயின் விலை நாளுக்கு நாள் அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் தேங்காய் விலை உயர்ந்துள்ளதுடன், சில பிரதேசங்களில் ஒரு தேங்காய் 150 ரூபாவிற்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தேங்காய் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் சில பகுதிகளில் தேங்காய் மொத்த விலை 160க்கு கிடைப்பதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் தேங்காய் விலை குறைவதற்கான எந்த அறிகுறியும் தற்போது காணப்படவில்லை எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.(ம-7)

# பல்கலை. மாணவர்களுடன் பிரதமர் கலந்துரையாடல்

பிரதமர் ஹரிணி அமர சூரியவுக்கும் பல்கலைக்கழக மாணவர் சங்கங்களுக்கு இடையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அதன்படி நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில், பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி மற்றும் மாணவர் நலன் தொடர்பாக இதுவரை எதிர்கொண்டுள்ள தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இக்கலந்துரையாடலுக்காக பல்கலைக்கழக மாணவர் பேரவை மற்றும் அதன் கீழுள்ள பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள், கல்வி உரிமைக்கான மாணவர் மக்கள் அதிகாரம் மற்றும் அதன் கீழுள்ள பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள், மருத்துவ பீட மாணவர் நடவடிக்கைக் குழு மற்றும் அனைத்து மருத்துவ பீட மாணவர் சங்கங்கள், பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான துறவிகள் பேரவை, உயர்தர தேசிய டிப்ளோமா மாணவர்கள் பாலமண்டலயா, சாகர பல்கலைக்கழக பொது மாணவர் சங்கம், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், மொரட்டுவை பொறியியல் பீட மாணவர் சங்கம் உள்ளிட்ட பல மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள் குழு கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# 20 வயது இளைஞன் இணுவிலில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இணுவில் ஆச்சிரம வீதிப் பகுதியில் 20 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் வீடு ஒன்றின் கட்டிட வேலைகள் இடம்பெற்று வந்த நிலையில் குறித்த வீட்டில் தங்கி நின்று கட்டிட நிர்மாண வேலைகளில் ஈடுபட்டு வந்த இளைஞனே குறித்த வீட்டினுள் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் நெடுங்குளம் வவுனியாவைச் சேர்ந்த அன்டனி மோசாட் என்ற 20வயது மதிக்கத்தக்க இளைஞன் என அடையாளங்காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மரண விசாரணைகள் ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டதோடு உடற்கூற்று பரிசோதனையில் குறித்த மரணம் தற்கொலை என உறுதி செய்யப்பட்டது.

சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)






## எனக்கும்...

அழிக்கும். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற பட்டயக் கணக்காளர்களின் 45ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், நான் பிரதமராக இருந்தபோது எனது அரசில் இருந்த இளைய அமைச்சர் ஒருவரின் கணவரால் ஐந்து மில்லியன் டொலர்கள் பாராளுமன்றத்தில் எனது மேசைக்குக் கொண்டு வரப்பட்டது. "அதை எடுத்துக்கொண்டு இப்போது வெளியேறு. நான் உன்னைக் கைது செய்ய உத்தரவிடுவேன்" என்று நான் சொன்னேன். அந்த நபருடன் சிங்கப்பூர் தொழிலதிபர் ஒருவரும் இருந்தார்.

ஊழலுக்குப் பழக்கப்பட்ட பெரியவர்களின் மனதை மாற்றுவது சாத்தியமில்லை. எனவே, சிறு வயதிலிருந்தே விழுமியங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம்.

எங்களில் ஒரு ஜனாதிபதி இருந்தார். அவர், உங்களால் முடிந்த வரை திருடுங்கள். ஆனால் பிடிபடாதீர்கள் என தனது அமைச்சரவையில் தெரிவித்தார். இதை அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்களிடமும் கூறிவந்தார்.

எல்லோரும் திருடினார்கள், யாரும் கைது செய்யப்படவில்லை. இந்த அமைப்பு தான் எமது நாட்டைச் சீரழித்துள்ளது.

தொழிலதிபர்கள் அவர்களின் திட்டங்களைப் பாதுகாக்க இலஞ்சம் கொடுக்கலாம் என்றாலும், பரவலான ஊழல் இறுதியில் நாட்டையே வங்குரோத்து நிலைக்கு இட்டுச் செல்லும்.

நீங்கள் உணராதது என்னவென்றால், நீங்கள் ஒரு திட்டத்துக்காக ஒருமுறை அல்லது இரண்டு முறை இலஞ்சம் பெறலாம். ஆனால், அதுவே முழு நாட்டின் நடைமுறையாக மாறும்போது நாடே அழியும் என்றார். (ம-7)

## பாராளு...

என முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கான விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நான் ஜனாதிபதித் தேர்தலில் சமையல் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டேன். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் புதிய கூட்டணி ஆகியன ஒன்றிணைந்து எனக்கு ஆதரவளித்தன. இவர்கள் அனைவரும் எனது தலைமையின் கீழ் செயற்பட்டனர்.

இவர்கள் அனைவரும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஒன்றிணைகின்றனர். புதிய ஜனநாயகக் கட்சியாக போட்டியிடுகின்றனர். எனது தலைமைத்துவத்தின் கீழ் அவர்கள் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் உரிய அனுபவம் உள்ளவர்கள். இவர்கள் கடந்த காலங்களில் தங்கள் பணியை ஒழுங்கான முறையில் முன்னெடுத்துள்ளனர்.

கடந்த இரண்டு வருடகாலமாக என்னுடன் இணைந்து செயற்பட்டவர்களுக்கு நாட்டின் பொருளாதார நெருக்கடியை கையாள்வதற்கான அனுபவம் உள்ளது. ஆகவே அவர்கள் பாராளுமன்றத்தில் இடம்பெற வேண்டும். அனுபவம்இன்றி பாராளுமன்றத்தை நிர்வகிக்க முடியாது. நீங்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் தோல்வியடைவீர்கள் என்றார். (ம-7)


### நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(ஜெட்விங் இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306
(2337)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலில் ஜோதிடக் கணிப்பிற்கு தடை!

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவாக ஜோதிட கணிப்புகளை செய்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.**




அதற்கமைய அனைத்து ஜோதிடர்களுக்கும் தேர்தல் ஆணையம் இது தொடர்பில் அறிவிப்பு விடுத்துள்ளது.

இதுபோன்ற கணிப்புகளை வெளியிடுவது தேர்தல் சட்டப்படி கடுமையான குற்றமாகும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான கணிப்புகளை வெளியிடுவோருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (நி)

# சோழன் உலக சாதனை படைத்த மட்டக்களப்பு சிறுமி ஸீனத்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் வசித்து வரும் முஹமட் பஸ்லி ஸீனத் எனும் 9 வயதுச் சிறுமி சோழன் உலக சாதனை படைத்துள்ளார். சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம் மற்றும் பீபல்ஸ் ஹெல்பிங் பீபில்ஸ் பவுண்டேஷன் போன்ற நிறுவனங்கள் இணைந்து காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையில் குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கதிரவன் இன்பராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சிறுமி ஸீனத் 3 நிமிடம் 18 நொடிகளில் 140 பெருக்கல் கணக்குகளுக்கு அபாகஸ் முறை மூலம் தீர்வெழுதி உலக சாதனை படைத்தார்.

சோழன் உலக சாதனை படைத்த சிறுமி ஸீனத்திற்கு, சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், தங்கப் பதக்கம், நினைவுக் கேடயம், அடையாள அட்டை, மற்றும் பைல் போன்றவை சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கதிரவன் இன்பராஜ், திருகோணமலை மாவட்டத் தலைவர் தனராஜ், மட்டக்களப்பு மாவட்டப் பொதுச் செயலாளர் சிவவரதகரன் மற்றும் செயற்குழு உறுப்பினர்களான பர்சான் போன்றோர் வழங்கிப் பாராட்டினார்கள். (நி)

# பொறுப்புக் கூறலை நிறைவேற்றுங்கள் வலியுறுத்துகிறார் எரான்விக்கிரமரத்ன



(கொழும்பு)

யுத்தத்தின் பின்னர் இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

எனவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை, பொறுப்புக் கூறலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வெளிநாட்டு கொள்கை தொடர்பில் வினவும் போது, தற்போது தற்காலிக அரசாங்கமே காணப்படுவதாகவும் எனவே தமது வெளிநாட்டு கொள்கை தொடர்பில் ஸ்திரமாகக் கூறமுடியாது என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிடுகின்றார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள யோசனை காலத்துக்கு காலம் மீள் திருத்தம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அண்மையில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. 20 நாடுகள் அதற்கு ஆதரவாகவும், 7 நாடுகள் எதிராகவும் தமது வாக்குகளைப் பயன்படுத்தின.

எவ்வாறிருப்பினும் யுத்தத்தின் பின்னர் இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதன் குறிக்கோள்களில் பிரதானமானது நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதாகும். அத்தோடு வடக்கு, கிழக்கு மாத்திரமின்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பெருமளவான பொது மக்கள் கொல்லப்பட்டனர். மனித உரிமைகள் எனும் போது அங்கு எவ்வித பேதங்களுக்கும் இடமளிக்கப் படமாட்டாது. அதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் ஆராய வேண்டியுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் இராணுவமயமாக்கல் அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. அதனைக் குறைக்க வேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தியிருக்கிறது.

மேலும் சுயாதீன நீதிமன்றம் காணப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் கடந்த இரு ஆண்டுகளில் நீதித்துறை முழுமையாக சுயாதீனமாகவே செயற்பட்டுள்ளது.

அதற்கமைய வரலாற்று முக்கியத்துவம் மிக்க தீர்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. முஸ்லிம் மக்கள் ஓரங்கட்டப்படும்நிலைமை மாற்றப்பட வேண்டும் என்று ஐ.நா. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே கடந்த அரசாங்கங்களைப் போன்று பழைய பாதையிலேயே பயணிக்காமல் புதிய பாதையில் பயணித்து பொறுப்புக் கூறலை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

இந்த அரசாங்கம் ஐ.நா. கூட்டத்தைப் புறக்கணித்தது மாத்திரமன்றி பிரிக்ஸ் மாநாட்டையும் புறக்கணித்துள்ளது. பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டிணைவாகும். உலகம் தற்போது மாற்றமடைந்து வருகிறது. நாமும் எமது வெளிநாட்டுக் கொள்கை என்ன என்பதை அறிந்து அந்த இடத்துக்குச் செல்ல வேண்டும்.

உலகில் மொத்த சனத் தொகையில் 40 சதவீதமான மக்கள் இந்த நாடுகளிலேயே வாழ்கின்றனர். அது மாத்திரமின்றி உலகின் மொத்த தேசிய உற்பத்தியில் 30 சதவீதத்தை இந்த நாடுகளே கொண்டுள்ளன. எனவே இவற்றுடன் இணைந்து நாமும் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதற்கு முயற்சிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய மட்ட கைப்பந்து போட்டி அக்கராயன் ம.வி இரண்டாமிடம்



தேசியமட்ட கைப் பந்துப் போட்டியில் கிளி நொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம் 2 ஆம் இடத்தினைப் பெற்றுள் ளது.

அம் பாந் தோட்டை ராஜபக்ச மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

இதில் 17 வயதுப் பிரி விற்கான ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி அக்கராயன் மகா வித் தியாலய அணி 2ஆம் இடத்தினைத் தனதாக் கியமை குறிப்பிடத்தக் கது. (6-350)

## 'ஹால் ஆப் பேம்' பட்டியலில் 3 நட்சத்திர வீரர்கள்

### ஐ.சி.சி பரிந்துரை

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் சாதித்த வீரர்,வீராங்கனைகளை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) "ஹால் ஆப் பேம்" என்ற பட்டியலில் இணைத்து கௌரவம் அளித்து வருவது வழக்கமான ஒன்றாக இருந்து வருகிறது.

அதன்படி அந்தக் கௌரவம் மிக்க பட்டியலில் புதிதாக 3 பேரைச் சேர்த்து ஐ.சி.சி அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதில் இங்கிலாந்து அணியின் அலெஸ்டைர் குக் மற்றும் இந்திய வீராங்கனை நீது டேவிட், தென் ஆபிரிக்காவின் அதிரடி பட்ஸ்மேன் ஏபி டிவில்லியர்ஸ் ஆகிய 3 கிரிக்கெட் நட்சத்திரங்களை "ஹால் ஆப் பேம்" பட்டியலில் இணைத்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கௌரவப்படுத்தியது.


இந்திய வீரர்களான பிஷன்சிங் பெடி, கவாஸ்கர், கபில்தேவ், கும்ப்ளே மற்றும் ராகுல் டிராவிட் ஆகியோர் ஏற்கனவே இந்த கௌரவத்தைப் பெற்றுள்ளனர்.

சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற வீரர்கள்,5 ஆண்டுகளுக்கு பிறகு தான் இந்த கௌரவத்துக்கு பரிந்துரைக்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3244

**வாகீஷ்**




**நர்த்தனா**




**மதுவந்தி**




**விதுரன்**




**ராகவி**




**திசாந்த்**

பிச்சைக்காரன்: ஐயா டீ குடிக்கணும் 30 ரூபாய் தாங்க ஐயா

கடைக்காரர்: ஒரு டீ 15 ரூபாய் தானேயா நீ 30 ரூபாய் கேட்கிறாய்

பிச்சைக்காரன்: என் கேர்ள் பிரண்டுக்கும் சேர்த்து தான்யா

கடைக்காரர்: அடப்பாவி நீயே பிச்சைக் காரன் உனக்கு கேர்ள் பிரண்டா?

பிச்சைக்காரன்: காதலிச்சதுக்கு அப்புறம் தான்யா இந்த நிலைமைக்கு வந்து விட்டேன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பவள விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையினை யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன் வழங்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையா ளர் கலாநிதி சு. ஜீவசுதனும் சிறப்பு விருந்தினராக வலி காமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) சோ.கலாவண்ணனும் கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவர் சங்கத் தலைவர் திருமதி. சாருதா ஆனந்தராஜா (பிரித்தானியா) மற்றும் பழைய மாணவர் த.கேதீஸ்வரன் (சுவீஸ்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நினைவுப் பேருரையினை வலி காமம் கல்வி வலய செயலாளரும் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான கலாநிதி சி. குகநேசன் வழங்கவுள்ளார். (நி-8-110)


**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (437)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
**077 839 3974**


# காணி விடுவிப்பு தொடர்பில்

# வலி.வடக்கில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வலி வடக்குப் பிரதேசத்தில் உள்ள காணிகள் விடுவிப்பு சம்பந்தமாக ஏற்கனவே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கவனம் செலுத்தியுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் நேற்று வியாழக் கிழமை பலாலி புனித ஆரோக்கிய மாதா ஆலய வளாகத்தில் பொது அமைப்புக்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றிருந்தது .

அக்கூட்டத்தில் இராணுவ வசமுள்ள காணிகள் விடுவிப்பு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. அதன்போது காணி தொடர்பாகவும் மீள் குடியேற்றம் தொடர்பாகவும் பல கோரிக்கைகளை முன்வைத்து பலர் தமது மன ஆதங்கங்களையும் வேதனைகளையும் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரத்திடம் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தனர்.

அதன்போது கருத்துத் தெரிவித்திருந்த சந்திரசேகர், வலி வடக்கு பிரதேசத்தில் உள்ள காணிகள் விடுவிப்பு சம்பந்தமாக ஏற்கனவே ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன் அது தொடர்பான விபரங்களையும் கோரியுள்ளதாகத் தெரிவித்தார். (நி-6-8-33)

## இளைஞர்கள் பாராளுமன்றம் செல்ல மக்களின் ஆதரவு வேண்டும்

### யாழ். ஊடக அமையத்தில் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

இளையோரை பாராளு மன்றுக்கு அனுப்புவதற்கு தமிழ் மக்கள் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ் . தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ் . ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், தென்னிலங்கை மக்கள் பழைய ஆட்சியாளர்களை துடைத்தெறிந்து, ஊழலற்ற, நேர்மையான அரசியல் வாதிகளை கொண் டுவர வேண்டும் என்ற எண்ணத்தோடு உள்ளார்கள். அதே போல் வடக்கிலும் ஒரு அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும். அதனால் தான் கற்றறிந்த இளையோரை நாங்கள் களமிறக்கியுள்ளோம். தமிழ் மக்கள் எங்களுக்கு ஒட்டு மொத்த ஆதரவையும் தர வேண்டும். மேலும் நாங்கள் தமிழ் மக்களின் நம்பிக்கையை வீணடிக்காது , செயற்படுவோம் எனத் தெரிவித்தார். (6-33)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியை திருமதி ஜீவபாலன் தயாளினி அவர்களின் அன்புத் தாயார்

அமரர். **கலியுகவரதி சண்முகநாதன்**

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (439)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

# இராசிபலன்

18.10.2024
ஐப்பசி 01, வெள்ளிக்கிழமை
பிரதமை பிற்பகல் 3.25 மணிவரை

அச்சுவினி பிற்பகல் 4.08 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் -10.32-12.02 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம்.
பூரம்ள, உத்தரம்

**வளவன்**

**மேஷம்** எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கனவு பலிதமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**ரிஷபம்** சுபகாரியச் செலவுகளில் தாராளளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்து வம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சயனசுகக் குறை வான நாள்.

**மிதுனம்** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக் கிடைக்கும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**சிம்மம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டை சிரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பேச்சில் இனிமை தென்படும், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள்.

**கன்னி** குடும்பப் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகனப் பழுது செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**துலாம்** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்களால் பலன் உண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** வழிபாட்டில் நம்பிக்கை கூடும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், திருமண முயற்சிகள் கைகூடும்.

**தனுசு** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், பொதுப் பயணங்களில் ஆர்வம்காட்டுவீர்கள்.

**மகரம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் வந்து சேரலாம், பிறர்நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கௌரவமான நாள்.

**கும்பம்** பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மீனம்** எதிர்பாராத தகவல்கள் இல்லம் தேடி வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**வீரியம் பேசுபவன் காரியம் செய்யமாட்டான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு பிரதேச பண்பாட்டு பெருவிழா





(கரணவாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நேற்று முன்தினம் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு பருத்தித்துறை 1 ஆம் கட்டை சந்தியிலிருந்து விழா மண்டபம் வரை அழைத்து வர மாணவர்கள், பிரதேச கலைஞர்களின் இன்னியம், சிலம்பம், காவடி, கரகம், தவில், உடுக்கடி என்பன இடம்பெற்றதனைத் தொடர்ந்து கடல்வளம், பனைவளம், தமிழரின் பாரம்பரியம், தொல்பொருள் சின்னங்கள், விவசாயம் போன்ற ஊர்திகளில் அணிவகுப்புக்கள் விழா மண்டபம் வரை சென்றிருந்தன.

இந்நிகழ்வில் செம்பருத்தி இதழ் 2 வெளியீடு இளங்கலைஞர், இளங் கலைப்பரிதி ஆகிய விருதுகள்வழங்கிகௌரவிக்கப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வடமராட்சி வடக்கு பிரதேச கலைஞர்கள், பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள், அப் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-60)

## தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை நூலகங்களின் தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நல்லூர் பிரதேச சபை செயலாளர் யு.ஜெலீபன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை உள நல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சி.சிவதாஸ் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பெ. வசந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-8)

## குடிசன மதிப்பீட்டு பணி யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 15 ஆவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பின் இறுதிப் பகுதியான கணக்கெடுக்கும் கட்டத்தின் ஓர் அங்கமாக, யாழ்ப்பாண மாவட்டத்திற்கான கணக்கெடுக்கும் பணியானது நேற்று முன்தினம் யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தொகை மதிப்பு ஆணையாளருமான ம. பிரதீபன் தலைமையில் கோப்பாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள கோப்பாய் வடக்கு கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலாளர் எஸ். சிவஸ்ரீ, மாவட்ட புள்ளிவிபரப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ம. வித்தியானந்தநேசன், கோப்பாய் பிரதேச செயலக புள்ளி விபர உத்தியோகத்தர் மற்றும் கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (6-33)

## சிறுவர், முதியோர் மாற்றாற்றலுள்ளோர் தினம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்றாற்றலுள்ளோர் தினம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. ராதிகா சஞ்சீவன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண நன்நடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் திருமதி. சுஜீவா சிவதாஸ் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யா/ வாதரவத்தை விக்னேஸ் வரா வித்தியாலய அதிபர். க.துஷ்யந்தனும் கௌரவ விருந்தினர்களாக யாழ். சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் மற்றும் கோப் பாய் கிளை லயன்ஸ் கழகத் தலைவர் சு. சுதர்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

# தேர்தல் கால வன்முறைகள் தடுக்க விசேட குழு



(யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் யாழ். பொலிஸாருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ். பொலிஸ் நிலைய மாநாட்டு மண்டபத்தில் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

பாராளுமன்றத் தேர்தல் காலங்களில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் வன்முறைகளைத் தடுக்கும் முகமாக குழு ஒன்று அமைக்க இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் சார்பில் 7 உறுப்பினர்களும், தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் சார்பில் 44 உறுப்பினர்களும் என மொத்தமாக 51 உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது.

மேலும் தேர்தல் பிரசார இடங்களுக்கு அனுமதி கோரல், ஒலிபெருக்கி சாதனங்களைப் பயன்படுத்தும் கால அளவு தொடர்பிலும் இதன் போது ஆராயப்பட்டன. (6)

# யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தின், காலாண்டிற்கான நிதி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமானது யாழ்.மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போது கருத்துத் தெரிவித்த பதில் அரச அதிபர், இக் கூட்டத்தின் நோக்கமானது நிதி முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடுகள் சரியான முறையில் பின்பற்றப் படுகின்றதா என்பதனை ஆராய்வதும் நிதிமுன்னேற்றங்களை மீளாய்வு செய்வதாகவும் தெரிவித்ததுடன், இவ் மீளாய்வுக் கூட்டத்தில் நிதி முன்னேற்றங்களை ஆராய்ந்த வகையில் திருப்திகரமாக விருப்பதாகவும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், கணக்காளர் உள்ளிட்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (6-33)

# தே.ம.ச கட்சி அலுவலகம் தென்மராட்சியில் திறந்து வைப்பு



(சாவகச்சேரி)

தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சிப் பிரதேசத்திற்கான அலுவலகம் நேற்று முன்தினம் மாலை ஏ9 வீதி, சாவகச்சேரிப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமாகிய இராமலிங்கம் சந்திரசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர்களும் மேள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் அலுவலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார். (6-30)

# ஆதன மோசடி வழக்கு கைதானவர்கள் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

அற்றோனித் தத்துவத்தை பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடா நாட்டில் வசிக்கும் நபர் ஒருவர் மானிப்பாய் பகுதியில் உள்ள தனது ஆதனங்கள் சிலவற்றுக்கு யாழ்ப்பாணத்தை சேர்ந்தவருக்கு தனது அற்றோனித் தத்துவத்தை வழங்கி இருந்தார்.

குறித்த நபர் தனக்கு அற்றோனித் தத்துவத்தில் வழங்கப்படாத அதிகாரத்தை பயன்படுத்தி மேலும் சில ஆதனங்களை மோசடியாக உரிம மாற்றம் செய்துள்ளார்.

இது தொடர்பில் கனடாவை சேர்ந்த நபர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து இருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை பிணையில் செல்ல மன்று அனுமதித்தது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




கல்வி அமைச்சினால் அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளிற் கிடையே நடைபெற்ற தேசியமட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையின் 17 வயதிற்குட்பட்ட அணியினர் 2 ஆம் இடத்தினைப் பெற்று வரலாற்றுச் சாதனை புரிந்தமைக்காக பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(2335)

வாழ்த்துபவர்

கௌதமி பேக்கரி உரிமையாளர், பூ.விமலராஜன்.


# 10, 000 சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிப்பு

## குடும்ப சுகாதார பணியகம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பத்தாயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் கடும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. போசாக்கு மாதத்தை முன்னிட்டு இலங்கை குடும்ப சுகாதாரப் பணியகம் வெளியிட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்த அதிர்ச்சித் தகவல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இலங்கையில் ஐந்து வயதுக்குக் குறைந்த பராயத்தில் உள்ள 10 ஆயிரத்து 323 சிறுவர்கள் கடும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐந்து வயதுக்குக் குறைவான சிறுவர்களில் 25 ஆயிரத்து 269 பேர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐந்து வயதுக்குக் குறைவான சிறுவர்களில் வயதுக்கேற்ற எடையைக் கொண்டிராத சிறுவர்கள் இரண்டு இலட்சத்து 15 ஆயிரத்து 386 பேர் இனம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கு மேலதிகமாக வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாத ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 538 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் குடும்ப சுகாதார பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# நாடு முழுவதும் அரிசிக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் அரிசி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியின் விலையை உயர்த்தியதைத் தொடர்ந்து நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களும் விலைகளை உயர்த்தியுள்ளனர்.

மேலும், நாட்டில் கீரி சம்பா தவிர்ந்த ஏனைய அரிசி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

பெரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியின் விலையைக் குறைப்பதாக கூறிய போதிலும் சந்தையில் ஒரு கிலோகிராம் அரிசியின் விலை 210 ரூபாய் முதல் 230 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மின்கட்டணங்கள், டீசலின் விலை போன்றன குறைந்துள்ள நிலையிலும் அரிசி உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதாகக் கூறி அரிசி விலையை அதிகரித்துள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்னதாக ஒரு கிலோ கிராம் எடையுடைய கீரி சம்பா அரிசி 400 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டது. தற்பொழுது 1 கிலோ கிராம் கீரி சம்பா 250 முதல் 270 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. கீரி சம்பா விலை உயர்வினால் அதிகளவு விவசாயிகள் கீரி சம்பாவை விளைவித்தனர் எனவும் ஏனைய அரிசி வகைகள் விளைவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் நாட்டில் தொடர்ந்தும் அரிசியின் விலை உயர்வாக காணப்படுகின்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# 2050 ஆண்டில் உணவு உற்பத்தி பாரியளவில் வீழ்ச்சியடையும்

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் நிலவி வரும் தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக 2050 ஆம் ஆண்டில் உணவு உற்பத்தி பாரியளவில் வீழ்ச்சியடையும் என நீர்ப்பொருளாதாரம் தொடர்பான பூகோள ஆணைக் குழுவின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

2050 ஆம் ஆண்டளவில் அதிக வருமானம் பெறும் நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீத வீழ்ச்சியை அவதானிக்க முடியும்

இந்த நிலையில், வருமானம் குறைந்த நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 15 சதவீதம் வரை வீழ்ச்சியடையும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது. (நி)

# சர்வதேச கால்பந்து போட்டியில் கிளிநொச்சியை சேர்ந்த வீரர்கள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச காற்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 3 தினங்கள் வியட்நாமில் நடைபெறவுள்ளது.

இதில் 12 மற்றும் 14 வயதிற்குட்பட்ட அணிகளில் கிளிநொச்சியைச் சேர்ந்த 3 வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

இதனிடையே சர்வதேச காற்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 19,20 மற்றும் 21 ஆம் திகதிகளில் வியட்நாமில் நடைபெற இருப்பதுடன் 10 நாடுகளைச் சேர்ந்த அணிகள் போட்டிகளில் பங்கேற்கின்றன.

இம்முறை இலங்கை அணி முதன் முறையாகப் பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-6-8)

# தரமற்ற தே. எண்ணெயால் புற்றுநோய் அபாயம்

(கொழும்பு)

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள தரமற்ற தேங்காய் எண்ணெய் மூலம் பலருக்குப் புற்றுநோய் ஏற்படும் அச்சம் நிலவுவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் தொடர் பான ஆய்வுகளை மேற்கொள் வதற்கு ஆய்வுகூடங்களில் போதியளவு வசதிகள் இல்லை என பொதுச்சுகாதார பரிசோதகர் சந்துன் ஹேமந்த தெரி வித்துள்ளார்.

எனவே தற்போது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் தரம் குறித்து ஆராய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் சில வகை தேங்காய் எண்ணெய்யில் புற்று நோயை ஏற்படுத்துவதற்கான இரசாயனங்கள் உள்ளதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1991-இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா-30<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: CIMA,ICT,Own shop<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14848 | பிறப்பு: 1989-இந்து<br>நட்சத்திரம் : ஆயிலியம்<br>கி.பா:34<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: MBBS,Doctor(france)<br>எதிர்பார்ப்பு : உயர் பதவி<br>தொ.இ: G/14872 |
| பிறப்பு:1992- இந்து<br>நட்சத்திரம்: பரணி 1 இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Own shop (pharmacy)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14850 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா:29 3/4<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: Bsc, ERP Consultant (pvt)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/14873 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: HNDA, CIMA, Accountant(gov)<br>எதிர்பார்ப்பு: அரச/ தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/14852 | பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா:15.5<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: வர்த்தக பட்டதாரி (இத்தாலி)<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/14874 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தெலுங்கானாவில் கார் விபத்து
## ஒரே குடும்பத்தை சேர்ந்த எழுவர் உயிரிழப்பு




(டில்லி)

தெலுங்கானாவின் சிவம் பேட்டையில், கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியோரத்தில் இருந்த மரத்தின் மீது மோதியதில் காரில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சிறுமியர் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரத்தினபுரி தாண்டா கிராமத்தைச் சேர்ந்த 8 பேர் சித்திப்பேட்டில் உள்ள உறவினர் வீட்டின் சுப நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்த போதே குறித்த விபத்து சம்பவித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

## இஸ்ரேலுக்கான
## ரத்து செ
### எச்சரிக்கை விடுத்



**(வோஷிங்டன்)**

**காசாவில் மனிதாபிமான காவிட்டால் இராணுவ ஒத்து நேரிடும் என இஸ்ரேலுக்கு விடுத்துள்ளது.**

காசாவில் போர்நிறுத்தம் கொண்டு வந்து அங்குள்ள மக்களுக்கு அத்தியாவசிய, மனிதாபிமான உதவிகள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என சர்வதேச நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக அதற்கு மறுப்பு தெரிவித்து வருவதோடு, தங்கள் நாட்டின் பணயக்கைதிகள் முழுமையாக விடுதலை செய்யப்படும்வரை போரை நிறுத்தப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே, காசாவில் மனிதாபிமான உதவிகளை அதிகரிக்காவிட்டால் இஸ்ரேலுக்கு வழங்கப்பட்டு

## பாலம் இடிந்து விழுந்து மூவர் பலி, நால்வர் காயம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் தெற்கு மாநிலமான மிசிசிப்பியில் நேற்று முன்தினம் புதன் கிழமை பிற்பகல் ஒரு பாலம் இடிந்து விழுந்ததில் குறைந்தது மூன்று பேர் உயிரிழந்தனர் மற்றும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர். விபத்து எப்படி நடந்தது என்ற விபரம் உடனடியாகத் தெரியவில்லை.

ஒரு மாதத்திற்கு முன்பு மூடப்பட்ட இந்தப் பாலம் இடிப்பதற்கு ஒரு பணிக்குழு தயாராகிக் கொண்டிருந்த போது இடிந்து வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

விபத்துக்கான காரணம் தொடர்பில் அதிகாரிகள் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## 425 மில். டொலர் பெறுமதியான ஆயுதங்கள் உக்ரைனுக்கு வழங்கும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

ரஷ்யாவுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டு வரும் உக்ரைனுக்கு 425 மில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுதங்களை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நவம்பர் மாதம் ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெற இருக்கிறது.

இந்தத் தேர்தலில் ஜனாதிபதி போட்டியில் இருந்து ஜோ பைடன் விலகியுள்ளார்.

இந்த நிலையில், உக்ரைனுக்கு 425 மில்லியல் டொலர் மதிப்பிலான ஆயுதங்களை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

போர் விமானங்கள், டாங்கிகள் மற்றும் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனது பதவி காலத்தில் கடைசியாக, போர் நிலவரம் குறித்து உக்ரைனுக்கு நேரில் சென்று ஆய்வு செய்யவும் ஜனாதிபதி ஜோ பைடன் முடிவு செய்துள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஏற்கனவே உக்ரைன் வெற்றி பெறும்வரை அசைக்க முடியாத உறுதிப்பாட்டை ஜனாதிபதி பைடனும், துணை ஜனாதிபதி கமலா ஹாரிசும் வழங்குவார்கள் என வெள்ளை மாளிகை கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.



இதனிடையே, உக்ரைனுக்கு 425 மில்லியன் டொலர் பாதுகாப்பு உபகரணங்களை வழங்கும் அமெரிக்காவுக்கு, ஜனாதிபதி ஜெலென்ஸ்கி நன்றி தெரிவித்துக் கொண்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..ன இராணுவ உதவி

# ..செய்யப்படும்!

## ..த்தது அமெரிக்கா

**..ான உதவிகளை அதிகரிக் ..த்துழைப்பை இரத்து செய்ய ..க்கு அமெரிக்கா எச்சரிக்கை**



வரும் இராணுவ ஒத்துழைப்பு இரத்து செய்யப்படும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதேவேளை மேற்குக் கரை பகுதியில் வன்முறைச் செயல்களில் ஈடுபடும் தீவிர நிலைப்பாட்டைக் கொண்ட யூத அமைப்புகள் மீது பிரித்தானியாவும் பொருளாதாரத் தடை விதித்தது.

இதற்கான அறிவிப்பை வெளியிட்ட பிரித்தானிய நிதியமைச்சர் டேவிட் லாமி மேற்குக் கரையில் பாலஸ்தீனர்கள் மீது தாக்குதல் நடத்தும் யூத குடியேற்றவாசிகள் மற்றும் தீவிர வலதுசாரி அமைப்புகள் மீது இஸ்ரேல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாகவும் குறிப்பிட்டார். (நி)

# இஸ்ரேல் வான்வழித்தாக்குதல் மேயர் உட்பட 15 பேர் பலி



(பெய்ரூட்)

பெய்ரூட், லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் அந்நாட்டைச் சேர்ந்த மேயர் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

லெபனானின் தெற்கு பகுதியில் நபாட்டியா மாகாணத்தில் உள்ள கானா நகரத்தை குறி வைத்து, இஸ்ரேல் படையினர் வான்வழி தாக்குதலை நேற்று முன்தினம் அரங்கேற்றினர். இதில், அங்குள்ள அரசு கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாகின.

அப்போது, அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பது குறித்து, அந்நகர மேயர் அகமது காஹில் தலைமையில் கூட்டம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில், அகமது காஹில் உட்பட 15 பேர் பலியாகினர். இது தவிர, கட்டட இடிபாடுகளில் சிக்கி இருப்பவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதனால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (நி)

# ஒரேயொரு மாணவிக்காக 15 மாதங்கள் சேவையில் ஈடுபட்ட ஜப்பானிய ரயில்வே



(டோக்கியோ)

ஒரே ஒரு பள்ளி மாணவிக்காக மூடப்பட இருந்த ரயில் நிலையத்தை அந்த மாணவியின் படிப்பு முடியும் வரை திறந்து வைத்த நெகிழ்ச்சியான உண்மை சம்பவம் ஜப்பான் நாட்டில் இடம்பெற்றுள்ளது.

ஜப்பானின் கியூ ஷீராட்டகி என்கிற ஊரில் தினமும் ஒரே ஒரு ரயில் மட்டும் வந்து செல்லும் ரயில் நிலையம் ஒன்று செயற்பட்டு வந்தது. அந்த ரயில் நிலையத்துக்கு போதிய பயணிகள் வராததால் ஜப்பானிய ரெயில்வே அந்த ரயில் நிலையத்தை உடனடியாக மூடி விட முடிவு செய்தது.

ரயில் நிலையத்தை மூடும் முன்பு அதிகாரிகள் ஆய்வு செய்ததில் கன ஹரதா என்கிற ஒரே ஒரு பள்ளி மாணவி மட்டும் தினமும் கியூ ஷிராட்டகி ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு 35 நிமிடங்கள் பயணம் செய்து மற்றுமோர் ரயில் நிலையத்தை அடைந்து அதன் பின் பள்ளிக்கு செல்வதாக ரயில்வே அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

உடனடியாக ரயில் நிலையத்தை மூடினால் மாணவியின் உயர்பள்ளி படிப்புப் பாதிக்கும் என்பதால் அந்த மாணவியின் படிப்பு முடியும் வரை கிட்டத்தட்ட 15 மாதங்கள் அந்த ரயில் நிலையத்தை திறந்து வைத்து படிப்பு முடிந்த பின் மூடியது ஜப்பானிய ரயில்வே. (நி)

# இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியை நிறுத்திய இத்தாலி

(வத்திக்கான்)

அமெரிக்கா உள்ளிட்ட நட்பு நாடுகளின் ஆதரவுடன் இஸ்ரேல் இராணுவம் ஹமாஸ் மீது போர் நடத்தி வருகிறது. இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கும் முக்கிய நாடுகளில் ஒன்றாக இத்தாலி இருந்து வருகிறது.

இந்தநிலையில் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்வது உடனடியாக நிறுத்தப்படும் என அந்த நாட்டின் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், “காசா பகுதியில் போர் நீடிப்பை தொடர்ந்து, இத்தாலியில் இருந்து இஸ்ரேலுக்கு இராணுவ தளபாடங்கள் ஏற்றுமதி செய்வதற்கான அனைத்து புதிய உரிமங்களும் உடனடியாக நிறுத்தப்படுகிறது” என்று தெரிவித்துள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டின் வாக்குகளை குறைத்தவர் நாமலே

## திலும் அமுனுகம பகிரங்கம்



(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தனியாக போட்டியிட வேண்டாம் என்று வற்புறத்திய போதும் நாமல் அதைக் கேட்கவில்லை எனத் தாயக மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளர் திலும் அமு னுகம தெரிவித்துள்ளார்.

கேகாலை அம்பன்பிட்டிய பிரதேசத்தில் உள்ள ஹோட்டலில் நடைபெற்ற கட்சியின் கேகாலை வேட்பாளர்கள் மற் றும் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் பொதுஜன பெரமுனவின் வாக்குகளை அறுபத்தொன்பது இலட்சத்தில் இருந்து மூன்று இலட்சமாக குறைத்தவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவே.வலு வான எதிர்க்கட்சியை உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் நம்பிக்கை. வலுவான எதிர்க் கட்சி என்றால் பாரம்பரிய அரசியலுக்கு செல்ல மாட்டோம். கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் வீழ்ச்சியடையக் காரணம் பலமான எதிர்க்கட்சி இல்லாததே. பலமான எதிர்க் கட்சி என்பது அதிக எம்பிக் களைக் கொண்ட எதிர்க்கட்சி அல்ல. இது தரத்தில் வலுவாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

திலும் அமுனுகம முன்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து தற்போது திலித்த ஜயவீர தலைமையிலான தாயக மக்கள் கட்சியுடன் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 130 | 150 | 120-170 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 250-300 | 400 |
| தக்காளி | 320 | 330 | 400 | 290 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 180 | 150-200 | 200 |
| கோவா | 230 | 250 | 250 | 290 | 300 |
| கரட் | 150 | 200 | 200 | 270 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 | 60 | 100 |
| புடோல் | 80 | 150 | 80 | 200 | 250 |
| வாழைக்காய் | 180 | 160 | 130 | 120 | 300 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 350 | 250-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 300 | 250 | 280 | 350 |
| பாகற்காய் | 500 | 450 | 400 | 400 | 500 |
| வெண்டக்காய் | 160 | 200 | 150 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 450 | 300 | 250 | 300-350 | 400 |
| லீக்ஸ் | 200 | 300 | 250 | 350 | 400 |
| பீற்றூட் | 140 | 120 | 150 | 150 | 200 |
| கறிமிளகாய் | 600 | 450 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 350 | 250 | 200 | 100-150 | 200 |
| போஞ்சி | 480 | 500 | 450 | 300 | 600 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 150 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 70 | 60 | 120 |
| தேசிக்காய் | 600 | 400 | 400 | 400-500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 130 | 90-170 | 100-150 |
| இராசவள்ளி | -- | 900 | 1500 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | -- | 450 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | 150 |

## இன்று ஒரு தகவல் 244



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# ஆன்மீக நோக்கம்

காசிக்குப் போனால் கர்மம் தொலையும் என்பது ஒரு நம்பிக்கை. காசியிலே இருக்கின்ற பெண் தெய்வம் அன்னபூரணி. அதனாலே அந்த ஊரிலே பசியாலே கஷ்டப்படுகின்வர்களே கிடையாது என்று ஒரு பெயர்.அங்கு இருக்கின்றவர்கள் மற்றவர்களுக்குத் தான தர்மங்களை தாராளமாகச் செய்து கொண்டே இருப்பார்கள் என்று அந்தக் காலத்திலேயே அந்த ஊருக்கு ஒரு புகழ் இருந்தது. ஜனங்கள் எல்லாம் அந்த ஊரைப் பற்றி அங்கே, இங்கே பெருமையாகப் பேசிக் கொண்டது வியாசபகவான் காதிலே விழுந்தது.

வியாசரைத் தெரியும் அல்லவா? வேதங்களை நான்காகப் பிரித்தவர். மகாபாரதம் எழுதியவர். அவருக்கு ஆச்சரியம், இப்படியும் ஓர் ஊர் இந்த உலகத்திலே இருக்க முடியுமா? என்று.'சரி எல்லோரும் அந்த ஊரைப்பற்றி இவ்வளவு பெருமையாகப் பேசிக்கொள்கிறார்கள். அதிலே எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்று சோதனை செய்து பார்த்துவிட வேண்டியது தான்' என்று முடிவு செய்து விட்டார்.உடனே தன்னுடைய சீடர்களைக் கூப்பிட்டார். 'காசிக்குப் போக வேண்டும் புறப்படுங்கள்' என்றார். 'ஏன் போகவேண்டும்' என்கின்ற விபரத்தையும் சொன்னார். பரிசோதனை செய்து பார்க்க வேண்டும் என்பதை விட அந்த ஊருக்குப் போனால் எல்லோரும் இலவசமாக சாப்பாடு போடுவார்களாமே. அதனாலே விதம்விதமாக சாப்பிட்டுப் பார்க்கலாம் என்கின்ற நினைப்புத்தான் சீடர்களுக்கு அதிகமாக இருந்தது. சரியான சாப்பாட்டுப் பிரியர்கள், சும்மா இருப்பார்களா உடனே உற்சாகமாகப் புறப்பட்டார்கள். எல்லோரும் காசிக்குப் போய்ச்சேர்ந்தார்கள். போனதும் முதல் வேலையாக ஒரு தர்ம சத்திரத்தை பிடித்து அங்கே தங்கிவிட்டார்கள். அடுத்த வேலையாக எல்லோரும் கங்கைக்குச் சென்று குளித்தார்கள்.

அடுத்தபடியாக அவர்கள் எல்லோரும் பிரிந்து ஆளுக்கு ஒவ்வொரு பக்கமாக ஊருக்குள்ளே போனார்கள். எதற்கு? சாப்பாட்டுக்காகத் தான் வந்ததே அதற்காகத்தானே! எங்கேயோ சுற்றிவிட்டு கடைசியாக சத்திரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். சாயந்தரமாக சோர்ந்துபோய் பசி மயக்கத்துடன் தள்ளாடிக் கொண்டே வந்து சேர்ந்தார்கள். என்ன காரணம்? அவர்கள் யாருக்குமே ஒரு வாய் சோறு கூட கிடைக்கவில்லை. "என்ன இது? எல்லோரும் இந்த ஊரைப் பற்றி அவ்வளவு உயர்வாகப் பேசினார்கள். கடைசியில் இங்கு வந்து பார்த்தால் ஒன்றுமே இல்லையே" என்று நினைத்தார்கள். இருந்தாலும் அவர்களுள் ஒரு சந்தேகம் . ஒருவருக்கு பசிக்கு மத்தியிலேயும் ஒரு யோசனை! "ஒரு வேளை இன்றைக்கு சாத்திரப்படி பிச்சை போடக்கூடாத நாளாக இருக்குமோ"? என்றார். பிச்சை இடக்கூடாத நாள் என்று ஒரு நாளும் எந்த சாஸ்திரமும் சொல்லவில்லையே என்றார் இன்னொருவர். எல்லா சாஸ்திரமும் படித்தவர் போல இருக்கிறது இருந்தாலும் படித்த சாஸ்திரமும் எல்லாம் பசிக்கு ஆகாரமாக உபயோகப் படுத்த முடியவில்லையே என்ன செய்வது. வியாசர் பார்த்தார், "சரி இன்றைக்கு இப்படி ஆகி விட்டது சற்றுப் பொறுமையாக இருங்கள். நாளைக்கு என்ன நடக்கும் என்று பார்க்கலாம்" என்றார். "நாளைக்கு என்ன நடக்கும்? இந்தப் பசி இன்னும் கொஞ்சம் அதிகமாகும் அவ்வளவு தான்" என்று நினைத்தார் ஒருவர். இருந்தாலும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார் வெளியே சொல்லவில்லை.மறுநாளும் தெருத் தெருவாக அலைந்தார்கள் ஒன்றும் கிடைக்கவில்லை அடுத்த நாளும் போனார்கள். "பிச்சை போடுவதற்கு என்னிடம் எதுவுமில்லை" என்று சொல்லிவிட்டார்கள். பல வீடுகளிலே! மறுநாளும் போனார்கள் இவர்கள் வருவதைப் பார்த்ததுமே எல்லோரும் கதவை இழுத்து மூட ஆரம்பித்து விட்டார்கள்.

ஏழு நாள் அப்படியே கடந்து விட்டது. எட்டாவது நாள் வியாசர் ஒரு வீட்டுக்கு முன்னால் சென்று நின்றார். குரல் கொடுத்தார். வீட்டிலிருந்தவர்கள் யாரும் இதைக் கண்டு கொள்ளவில்லை. வியாசருக்கு கோபம் வந்து விட்டது. அது எல்லை மீறிப் போய்விட்டது. காசியிலே இருக்கிறவர்கள் அத்தனை பேருக்கும் சாபம் கொடுத்து விட வேண்டும் என்று நினைத்தார். அதற்காக வலது கையைத் தூக்கினார். அந்த சமயத்தில் ஒரு பெரிய வீட்டுக் கதவு திறந்தது. வீட்டுக்கார அம்மா வெளியே வந்தார். "நிறுத்துங்கள்!" என்றார். அவ்வளவு தான் என்ன ஆச்சரியம்? தூக்கிய கையை இவரால் இறக்கவே முடியவில்லை. அப்படியே நின்று போய்விட்டது. அந்த அம்மா லேசாகச் சிரிக்க ஆரம்பித்தார். அதற்குப் பிறகு தான் இவர் கையை அசைக்க முடிந்தது.

உடனே கீழே கொண்டு வந்துவிட்டார். அந்த அம்மா இவரைப் பார்த்து "இதோ பாருங்கள் நீங்கள் இந்த ஊரின் பேரில் காரணமே இல்லாமல் கோபப்படுவதில் அர்த்தம் இல்லை" என்றார். "என்னம்மா இது. நாங்கள் ஏழு நாட்களாகப் பட்டினி கிடக்கின்றோம். நீங்கள் இப்படிச் சொல்லு கிறீர்களே" என்றார் . அந்த அம்மா சிரித்துக் கொண்டே "சரி எல்லோரும் எங்கள் வீட்டுக்கு வாருங்கள்" என்று கூப்பிட்டார்.வியாசர் சத்திரத்திற்குப் போய் சீடர்களிடம் விடயத்தைச் சொன்னார். ஏழு நாள் பட்டினியில் தளர்ந்து போய் இருந்தாலும் எல்லோரும் இதைக் கேட்டவுடனே துள்ளி எழுந்துகொண்டார்கள். அடுத்த விநாடி அந்த அம்மா வீட்டிலே! எல்லோருக்கும் இலை போட்டார். சோறு வைக்கவில்லை. கறி வைக்க வில்லை. அந்த அம்மா ஏன் சும்மா உட்கார்ந்து இருக்கிறீர்கள்.சாப்பிட வேண்டியது தானே என்றார். என்ன இது வெறும் இலையையா சாப்பிடுவது வியாசருக்கு அதிகமாகிவிட்டது. என்னமோ சொல்லுவதற்கு வாயைத் திறந்தார். அடுத்த கணம் இலையைப் பார்த்தால் விதவிதமான உணவு வகைகள் நிறைந்து போய் இருக்கிறது. ஏழு நாள் பட்டினி சும்மா இருப்பார்களா? அடுத்த ஏழு நாட்களுக்கும் தாங்கும் அளவுக்கு ஒரு புடி புடித்தார்கள். அதன் பின்னர் நிமிர்ந்து பார்த்தால் தேவி அன்னபூரணியே காட்சி கொடுத்தாராம். சரி அவர்களுக்கு ஏன் ஏழு நாள் இவ்வளவு கஷ்டம்? இதற்கு சிவபெருமான் வியாசரிடம் விளக்கம் கொடுக்கிறார். உங்களிலே ஒருவர் கூட சிவ பக்தி சிரத்தையோடு காசி யாத்திரை வரவில்லை. நீங்கள் இந்த ஊர் அதிசயத்தை பரிசோதனை செய்து பார்க்க வேண்டும் என்று வந்தீர்கள். உங்கள் சீடர்கள் விதவிதமாக சாப்பிட்டு பார்க்க வேண்டும் என்கின்ற ஆசையிலே வந்தார்கள்! அதனாலே தான் கஷ்டம் என்றார். உண்மைதான்! நமது நோக்கங்கள் முறையாக இருந்தால்தான் ஆன்மிக அனுபவங்களும் முறையாக இருக்கும். இல்லை என்றால் அனுபவங்கள் வேறு விதமாகத்தான் இருக்கும். இவர்கள் பட்டினி கிடந்தது மாதிரி! இப்பவும் பலபேர் காசி யாத்திரை என்று போகிறார்களே. அவர்களுக்கும் ஒவ்வொரு நோக்கம் இருப்பது உண்டு. அங்கே சென்று தங்களுக்கு மிகவும் பிரியமான ஏதாவது ஒன்றை விட்டுவிட்டு வந்து விடுவதும் உண்டு. அலுவலகத்திலே வேலை பார்க்கின்ற ஒரு அம்மா சமீபத்திலே காசிக்கு குடும்பத்தோடு சென்று வந்தார்."என்னம்மா உங்களுக்கு பிரியமான எதையாவது காசியிலே விட்டுவிட்டு வந்தீர்களா"? என்று கேட்டேன். "ஆமாம்!" என்றார். மிகவும் பக்தி சிரத்தையோடு! "எதை என்று கேட்டேன். எங்க மாமியாரை!" என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளையில் இடம்பெற்ற புற்றுநோய் விழிப்புணர்வு



(தருமபுரம்)

புற்றுநோயிலிருந்து பாது காப்போம் என்ற தொனிப் பொருளில் புற்றுநோய் விழிப்புணர்வு நடை பவனி ஒன்று நேற்று முன்தினம் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையின் தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவின் ஏற் பாட்டில் பளைப்பகுதியில் நடைபெற்றது.

குறித்த விழிப்புணர்வு நடைபவனியானது பளை பிரதேச வைத்தியசாலை யிலிருந்து பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டது. தொட ர்ந்து பிரதேச செயலகத்தில் விழிப்புணர்வு கருத்த ரங்கும் நடைபெற்றது.

குறித்த விழிப்புணர்வு நடைபயணத்தில் கிளி நொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப் பேற்று வைத்திய நிபுணர் வைத்தியர் ஆர்-சுதர்சன், தொற்றாநோய்கள் சம்பந் தமான வைத்தியர் எஸ்-பேணாட்டோ, பளை பிரதேச பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.பிரதீபன், பளை சுகா தார வைத்திய அதிகாரி வைத்தியர் எச்-அனுசா, வைத்தியர்கள், மற்றும் தாதியர்கள், சுகாதார உத் தியோகத்தர்கள் பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர் கள், இராணுவத்தினர், பொலிஸார், பாடசாலை மாணவர்கள் எனப் பல ரும் கலந்து கொண்ட னர். (6-316)

# தெற்கின் அரசியல் மாற்றம் வடக்கிலும் நிகழ வேண்டும்

## சந்திரகுமார் தெரிவிப்பு

(அக்கராயன்)

தென்னிலங்கையில் ஏற் பட்ட அரசியல் மாற்றம் போன்று வடக்கிலும் ஏற்பட வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களும் அதன் நன் மைகளை அனுபவிக்க முடி யும் என ஐக்கிய மக்கள் கூட் டணியின் யாழ். கிளிநொச்சி மாவட்டத்தின் முத ன்மை வேட்பாளர் முன் னாள் எம்.பி மு.சந்திர குமார் தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் கிளி நொச்சியில் தனது ஆதரவா ளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

மக்கள் இந்தத் தேர்தலை தென்னிலங்கை போன்ற ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் தேர்தலாக மாற்ற வேண்டும். அதி காரத்தில் இருந்த போதும் சரி அதற்கு பின்னரான காலத் திலும் சரி இந்த மண்ணில் தொடர்ச்சியாக இந்த மக்க ளுடன் மக்களுக்காக களப்பணி யாற்றி வர்கள் நாம். எப் பொழு தும் மக்களுக்காகவே உழை த்து வருகின் றோம் எனவும் தெரிவித்தார் (6-350)

## உரமானிய விண்ணப்பம் வவுனியாவில் ஆரம்பம்

(வவுனியா)

இந்த ஆண்டு பெரும் போகத்தில் இருந்து விவசா யிகளுக்கு ஹெக்டேயர் ஒன் றுக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் உர மானியம் வழங்கு வதற்கான ஆரம்பகட்டப் பணி களை அரசாங்கம் ஆரம்பித் துள்ளது.

வடமாகாணத்தில் பெரும் போகத்திற்கான நெல் விதைப்பு ப்பணிகள் பெரும்பாலான இடங் களில் ஏற்கனவே ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தின் 8 கமநல சேவை நிலையங்க ளின் கீழுள்ள விவசாய அமைப் புக்கள் உரமானியம் வழங்கு வதற்கு விவசாயிக ளிடமிருந்து விண்ணப் பங்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. (6)

# ஈ.ம.ஜ கட்சி அலுவலகம் கிளிநொச்சியில் திறந்து வைப்பு



(தருமபுரம்)

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி யின் கட்சி அலுவலகம் நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் குறித்த கட்சிஅலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. இதன் போது இந்நிகழ்வில் கட்சி ஆதரவாளர் கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (6-8-316)



# எனது 33 வருட ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...!

## சோழியபுரம் பத்ம வெளியீடு

விநாயகருக்குரிய நாட்கள் 21 (21.09. 2024) சங்கடகர சதுர்த்தி தினத்திலே ஜனாதிபதித் தேர்தல் எதற்காக? யாருக் காக? என்று வலம்புரிப் பத்திரிகையிலே 18.09.2024 அன்று அடியேன் எல்லோருக் கும் அறியத்தந்திருந்தேன்.

**என் இனிய நெஞ்சங்களே!**

சைவ சமயத்தை சார்ந்த எல்லோருக் கும் விளக்கங்கள் தேவையில்லை. இருந் தும் தமிழ் மக்கள் எல்லோருக்கும் விளக்கம் தரவேண்டியது எனது கடமையாகும். விநாயகருக்கு விஷேட தினங்கள் இரண்டு. சதுர்த்தி. சங்கடகர சதுர்த்தி. இதை விட அதி விஷேட நாட்கள் 21 பிள்ளையார் கதை படிப்பது. இவற்றில் சதுர்த்தி தினம் எங்கள் துன்பங்களைப் போக்க விநாயகரை வேண்டி விரதமிருப்பது. சங்கடகர சதுர்த்தி எங்கள் சங்கடங்களைப் போக்குவது. அதா வது துன்பத்தின் மேல் துன்பம் தீராத துன் பத்தைப் போக்குவது. அதனால் இரண்டு சதுர்த்தியும் விநாயகருக்கு முக்கியமான விரத நாட்கள்.இதை விட மிக முக்கியமான நாட்கள் 21 மார்கழி மாதம் பிள்ளையார் கதை படித்து 20ஆம் நாள் கஜமுகன் சங்காரம் நடைபெற்று 21ஆம் நாள் பெருங் கதையுடன் முடிவுபெறும். இப்படியான சிறப்புப் பெற்ற 21ஆம். சங்கடகர சதுர்த தினமும் சேர்ந்த நன்னாளிலே ஜனாதி பதிபதித் தேர்தல் நடக்கின்றது என்றால் இத் தேர்தல் யாரால் நடத் தப்பட்டது. ஆம் ஈசுர விநாயகரினால் நடாத்தப்பட்டது என்பதில் ஐயமேயில்லை. யாருக்காக? தமிழ் மக்க ளுக்காக. எதற்காக? தீராதப் பிரச்சனையை தீர்ப்பதற்காக முதலில் ஓர் மாற்றம் வேண் டும். அதனால் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளார். அடுத்து என்ன ? அதிசயங் கள் அற்புதங்கள்! ஆச்சரியங்கள் எல்லாமே நடக்கப் போகின்றது. பொறுத்திருந்து பாருங்கள் நடைமுறையில் உணருங்கள்.

"நடப்பவை யாவும் நன்மைக்கே"

நாம் ஒரு நல்ல காரியத்தைச் செய்யும் போது நாட்காரியம் செய்து வைப்பது வழமை. அதாவது பிள்ளைகளின் படிப்பிற்கு ஏடு தொடக்கி வைப்பது. வீடு கட்டுவ தற்கு. அத்திவாரம் போட்டு வைப்பது. திரு மணம் செய்வதற்கு பொன்னுருக்கல் இது போன்றே எங்கள் தீராத பிரச்சனைக்கு சங்கடகர சதுர்த்தி நன்நாளிலே ஈசுர விநாயகர் மாற் றத்தைக் கொண்டு வந்துள்ளார் என்ப தாகும். ஆன்மீகப் போராட்டத்தில் ஈசுர விநாயகனின் அருளைப் பெறுவதற்கு நான் பட்ட கஷ்டங்கள்....

**என் அன்பு உள்ளங்களே !**

சும்மா இருந்து இறைவனிடத்தில் எதை யும் பெறமுடியாது. அதனால் தும்பிக்கையில் மனுவைச் சமர்ப்பித்துவிட்டு அதற்கு விஷேட பூஜைகள் தொடர்ந்து அடியேன் செய்து வந்தேன். 3 மாதத்தின் பின்னர் ஒரு தர்சனம் ! கடிதம் கிடைத்தது. நடவடிக்கை எடுக்கின் றேன் என்று கூறியருளினார். அடியேனுக்கு அதன் அர்த்தம் புரியவில்லை. வேறு ஒரு ஐயாவிடம் சென்று தர்சனத்தைக் கூறினேன். நீர் கட்டிய மனு தான். அந்தக் கடிதம் பிள்ளையார் அதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் என்று உமக்கு தகவல் தந்திருக்கின்றார் என்று ஐயா கூறினார். என்னையே என்னால் நம்ப முடியவில்லை. அக்கணமே அதிசயம். அற் புதம். ஆச்சரியம் எல்லாமே நடந்துவிட்டன. அன்றிலிருந்து தர்சனங்கள் ஒவ்வொன்றாக காட்டியருளத் தொடங்கிவிட்டார். மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு பிரசுரத்தையும் காட்டியருளினார். அவரின் கருணையை எப்படிக் கூறுவேன்?

ஈசுர விநாயகர் காட்டியருளிய தர்சனங் களை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக அடியேன் வெளியிட்ட பிரசுரங்கள்

01) சோழியபுரம் பத்ம வெளியீடு "நம்பிக்கை நம்பிக்கை " - 12

02) சோழியபுரம் பத்ம வெளியீடு "ஈசுர விநாயகரின் குரல்" - 14

03) சோழியபுரம் பத்ம வெளியீடு "ஈசுர விநாயகரின் அருட் குரல்" - 12

ஈசுர விநாயகர் தர்சனங்களைக் காட்டி யவுடன் அதை [illegible] கொண்டு சென்று [illegible] ஒவ்வொரு கோவில்கள். பாடசாலைகள். கந்தோர்கள். வங்கிகள். வைத்தியசாலை கள். வாசிகசாலைகள். பொதுச் சந்தைகள். கடைகள் யாழ்ப்பாணம் மட்டுமல்ல வட மராட்சி. தென்மராட்சி எல்லா இடங்களுக்கும். "சைக்கிளில்" ஓடி ஓடிச் சென்று கொடுத்து ஈசுர விநாயகரின் தெய்வீகத்தை அறியத்தந் திருந்தேன்.சும்மா இருந்து இறைவனிடத் தில் எதையும் பெற முடியாது. ஊஞ்சல் புத்த கம். தேர்ப்புத்தகம் உட்பட 40 வெளியீடு களுக்கு மேல் அடியேனால் வெளியிடப் பட்டன.

2. ஆன்மீகப் போராட்டத்திற்காகக் கட்டிய கட்டடங்கள். மத நல்லிணக்கக் கோபுரம் (எம்மதமும் சம்மதம்) இன நல்லிணக்க கோபுரம் (மூவினத்தவர்க்கும்) சமாதான அரண். தெற்கு அலங்கார நுழைவாயில் வடகிழக்கு அலங்கார நுழைவாயில். மலையைக் கட்டி அதனுள் கதிர்காமக்கந்தனுக்கு கோவில் அமைத்தது. இவையெல்லாம் ஆன்மீகப் போராட்டத்திற்காக அடியேனால் கட்டப் பட்டவை. இவற்றையெல்லாம் கட்டுவதற்கு அடியேன் பட்ட கஷ்டங்கள் ஈசுர விநாயக ருக்குதான் தெரியும். சும்மா இருந்து இறைவ னிடத்தில் எதையும் பெறமுடியாது.

3. யுத்த காலத்தில் தமிழ் மக்களைக் காக்க ஒவ்வொரு கோரிக்கைகளை முன் வைத்து இலட்சக்கணக்கான விடிவிளக்குகள் ஈசுர விநாயகரின் ஆலயத்தில் ஏற்றி வைக்கப் பட்டன.அதாவது ஒவ்வொரு கோரிக்கை களுக்கும் 108 விடி விளக்குகள் அடிய வர்களினால்ஏற்றிவைக்கப்பட்டு இரவிரவாக அடியேன். மனைவி. பிள்ளைகள். குடும்ப மாக ஆலயத்திலிருந்து விடியும் வரைக்கும் விழித்திருந்து விளக்குகளைப் பார்த்து எண்ணெய் விட்டு 108 விளக்குகள் எரிப்பது வழமை. ஒருமுறை தமிழ் மக்களைக்காக்க 12 இராசிக்கும் திருவிழா 12 நாட்களும் 108 விடிவிளக்குகள் அடியேனால் ஏற்றிவைக் கப்பட்டன. இப்படியாக நித்திரை விழித்து கஷ்டப்பட்டுத்தான் ஈசுர விநாயகரின் அருளைப் பெற்றேன். சும்மா இருந்து இறைவனிடம் [illegible].... எங்கள் அன்றாட [illegible] பாருங்கள். சும்மா இருந்து எதையும் பெறமுடியாது என்றால் இறை வனிடத்தில் எப்படிப் பெறுவது? ஒன்றா? இரண்டா?

33 வருடங்கள் அடியேன்பட்ட கஷ்டங் கள் சொல்லில் அடங்குமா? சொல்லி முடியுமா? ஈசுர விநாயகருக்குத்தான் தெரியும். ஆனால் மக்கள் அறிய வேண்டுமல்லவா ! ஆன்மீகப் போராட்டம் ஆன்மீகப் போராட்டம் என்று ஐயா கூறுகின்றாரே அது என்ன ? என்ற கேள்வி உங்களுக்கு இருக்கக் கூடாது. அதனால் ஈசுர விநாயகரின் ஆலயத்திலே நடந்த. நடக்கின்ற நடக் கப்போகின்ற அத்தனை சம்பவங்களும் தமிழ் மக்கள் அனைவருக்கும் தெரியப் படுத்த வேண்டியது எனது கட்டாயக் கடமை யாகும். அடியேன்பட்ட கஷ்டங்களுக்கெல் லாம் நிச்சயம் கை மேற்பலன் பலாபலன்கள் உண்டு. யாருக்கு? தமிழ் மக்களுக்கு அதா வது தமிழினம் நிம்மதியாக வாழ வேண் டும் என்ற ஒரே நோக்கத்திற்காகத்தான் ஈசுர விநாயகரைத் தஞ்சம் என்று அடைந் தேன். அவரும் அடியேனின் கோரிக்கை களை ஏற்று ஆன்மீகப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்துத் தந்துவிட்டார் என்றே கூறுவேன். அதனால் தான் அடி யேனிடம் தமிழ் மக்களின் ஆட்சித் திறப்பைத் தந்தருளினார். எனவே உங்கள் எல்லோ ரையும் விரைவாக உணரவைப்பார். தீராத பிரச்சினையைத் தீர்த்து வைப்பார். சர்வ வல்லமை பொருந்திய சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகரை வணங்குகள் சதா நினை யுங்கள். அவர் திருப்பாதம் போற்றி போற்றி !

குறிப்பு:தர்சனம். கனவு இரண்டும் இரவு நித்திரை கொள்ளும் போது தான் காணு கின்றோம். தர்சனம் என்பது காண்பது அப்படியே நடப்பது. காணும் நேரம் 3 5 மணி வரை. கனவு என்பது காண்பது மாறி நடப்பது எந்நேரமும் காணலாம்.

"பார் தெரியுது பறாளாயான் பதி பக்தர் குறை தீர்க்கும் சந்நிதி"

சோழியூரான் பிறை சூடிக்குரு
(ஆன்மீகவாதியும். சந்ததிப் பூசகரும். பரம்பரைப் பரிபாலகரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 609





பேதைப் பெண்ணே! இனிச் செய்யவேண்டியதைப் பற்றி யோசிக்கவும் வேண்டுமா! யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? அரண்மனைத் தோட்டத்தையடுத்துள்ள ஓடை அரசலாற்றில் கலக்கிறது. அரசலாறு கடலில் போய்ச் சங்கமமாகிறது. கடலின் அடியில் காத்திருக்கிறார் இளவரசர். எனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறார். கடலின் அடியில் முத்துக்களாலும், பவளங்களிலும் ஆன அற்புத மாளிகையில் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். அவரைச் சந்திக்கப் போகாமல் இந்த உலகத்தில் எனக்கு வேறென்ன வேலை? யாருக்காக இங்கே நான் இருக்க வேண்டும்? இவ்வாறு வானதி தீர்மானம் செய்ததும் வானதியின் உள்ளத்தில் ஒருவித அமைதியே உண்டாகிவிட்டது. அவளது பரபரப்பு அடங்கிவிட்டது. துயரம் நீங்கிவிட்டது. கவலை தீர்ந்துவிட்டது.

நேரே ஓடைக் கரைக்குச் சென்றாள். பளிங்குக் கல்லினாலான படிக்கட்டுகளில் இறங்கி நின்றாள் சுற்று முற்றும் பார்த்தாள். அதோ தூரத்தில் படகு ஒன்று வருவது தெரிந்தது. அதில் இருப்பவர் இளையபிராட்டிதான். அவருடன் இருக்கும் ஆடவன் யார்? குடந்தை சோதிடர் வீட்டில் முதலில் சந்தித்து, இலங்கைக்கு ஓலை எடுத்துச் சென்ற வாலிபன் போலத் தோன்றுகிறது. இளவரசரைப் பற்றிய செய்தியைக் கொண்டு வந்தவன் அவன்தான் போலும்! அதனாலேதான் அவனை இளைய பிராட்டி தனியாக அழைத்துப் போகிறார் விவரங்களைக் கேட்டு, அறிந்திருக்கிறார்.

எனக்குத் தெரிந்தால் கஷ்டப்படுவேன் என்று என்னை விட்டுவிட்டுப் போய் இருக்கிறார். அவர் வந்துவிட்டால் என் இஷ்டப்படி செய்ய முடியாது. ஏதாவது சமாதானம் சொல்லப் பார்ப்பார் ஆறுதல் கூறப்பார்ப்பார், நான் இளவரசரைப் போய்ச் சேர்வதைக் கட்டாயம் தடுத்துவிடுவார். ஆனாலும், அவரிடம் சொல்லாமல், கடைசியாக ஒரு தடவை விடைபெற்றுக்கொள்ளாமல் போவது நியாயமா? தாய் தந்தையற்ற இந்த அநாதைப் பெண்ணிடம் இத்தனை அன்பாக இருந்தாரே! அவருக்கு ஒரு நன்றி வார்த்தையாவது சொல்ல வேண்டாமா? முடியாது! இனி ஒரு கணமும் காத்திருக்க முடியாது! இதோ தண்ணீரில் அவர் முகம் தெரிகிறது.

இதோ அவருடைய முழு உருவமும் பொலிகிறது. என்னை அவர் அழைக்கிறார் புன்னகை செய்து கூப்பிடுகிறார். "உன்னை நான் மணம் புரிந்து கொள்வதற்கு எல்லாத் தடைகளும் நீங்கி விட்டன "வா!" என்று அழைக்கிறார். இன்னும் ஏன் தாமதம்?.. ஆகா! தலை ஏன் இப்படிச் சுற்றுகிறது? பாழும் மயக்கம் வருகிறதா, என்ன? மயக்கம் வந்தால் பாதகமில்லை. கரையில் விழாமல் இந்த ஓடைத் தண்ணீரில் விழுந்தால் போதும்!

வானதியின் மனோரதம் நிறைவேறியது. அவள் தண்ணீரிலேதான் விழுந்தாள். கொதித்துக் கொண்டிருந்த உடம்பு இனிதாகக் குளிர்ந்தது, இதயம் குளிர்ந்தது. கீழே கீழே கீழே போய்க் கொண்டிருந்தாள். எத்தனை தூரம், எத்தனை காலம் போனாள் என்று சொல்ல முடியாது. சில விநாடி நேரமாகவும் இருக்கலாம் நீண்ட பல யுகங்களாகவும் இருக்கலாம்.

ஆம், கடலின் அடியிலுள்ள அற்புத லோகத்துக்கு அவள் வந்து விட்டாள். நாகலோகம் என்பது இதுதான் போலும்! ஆகா எத்தகைய அழகிய மாளிகைகள்! எத்தனை அடுக்கு மெத்தைகள் முடிவில்லாமல், சிகரம் எங்கே இருக்கிறதென்று தெரியாமல் அல்லவா, இம்மாளிகைகள் உயர்ந்து விளங்குகின்றன!

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# விடுகதைகள்

+ அந்தரத்திலே தொங்குது செம்பும் தண்ணீரும்?
  இளநீர்
+ நீல நிற மேடையிலே கோடி மலர் காயுது?
  விண்மீன்கள்
+ நன்றாகாகச் சுமை தாங்கும், நன்றாக உதை உதைக்கும்?
  கழுதை
+ எங்கப்பன் ஊர் சுற்றி, எங்கள் அம்மா குந்தாணி?
  பூசணிக்காய்
+ தட்டுத்தட்டாய் மல்லாந்திருக்கும் ஒரு சொட்டுத் தண்ணீரும் ஒட்டாது?
  தாமரை இலை
+ உறைக்குள் இருக்கும் உயிரைப் பறிக்கும்?
  கத்தி
+ நான் போகாத பொந்துக்குள்ளே என் தம்பி சங்கரன் புகுந்து விட்டான்?
  ஊசி நூல்
+ வா என்று கூப்பிட்டுப் போ என்று சொல்லும் ஆனால் வாய்திறந்து பேசாது?
  தொழிற்சாலைச் சங்கு
+ மூன்று கொம்புமாடு ஒரு கொம்பால் முட்டுது?
  நெருஞ்சி முள்
+ ஆணை இல்லா ஆனை, அது என்ன ஆனை?
  முந்தானை
+ ஏரித் தண்ணீர் வற்றவற்ற எருமைக்கடா உப்ப உப்ப?
  பணியாரம்
+ இரத்தத்தில் வளர்வது ரத்தம் இல்லாதது?
  நகம்
+ தண்ணீரில்லாத தடாகத்திலே தாவிப் பாயுது ஒரு கப்பல்?
  ஒட்டகம்
+ மூட்டை மூட்டையாய் எரித்தாலும் பிடி சாம்பல் ஆகாது?
  தலைமுடி
+ திரண்டு வந்த மக்கள் ஒரேதிசை நோக்கி பார்க்கிறார்கள்?
  திரைப்படம்
+ மரம் ஏறும் மங்காத்தாளுக்கு முதுகிலே மூன்று சூடு?
  அணில்
+ எட்டி நின்று பார்ப்பான் பெட்டியில் போட்டுக் கொள்வான்?
  கமரா
+ ஒரு துரைக்கு இரண்டு தொப்பி?
  வறுத்தபட்டாணி
+ ஒற்றைக் காலில் சுற்றுபவனுக்கு அடிக்கடி மயக்கம்?
  பம்பரம்

எஸ்.ஜர்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதநேயத்தோடு மக்களின் உணர்வை புரிந்து கொண்டால் தனது மரியாதை தானே உயரும்.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கில் விபத்துக்களைத் தடுக்க ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும்

விபத்து மரணங்கள் குறித்து இன்னமும் நாம் சிந்திக்காதவர்களாக இருப்பதுதான் எங்களின் மிகப்பெரும் பலயீனம்.

ஏதோ விபத்து என்றால், அதைத் தடுக்க முடியாதது போலவும் விபத்து ஏற்படவே செய்யும் என்பது போலவும் நமது சிந்தனை அமைந்துவிட்டதோ என்று எண்ணுமளவுக்கு நிலைமை உள்ளது.

விபத்து மரணங்களைத் தடுப்பதற்கு ஏதேனும் செய்யுங்கள் என இந்தப் பகுதியில் பல தடவைகள் எழுதியாயிற்று. இருந்தும் இன்னமும் எவரும் அதுபற்றிச் சிந்திக்கவில்லை.

ஆம், வல்லைப்பாலத்தின் அமைப்பு, விபத்தை ஏற்படுத்துவதாக இருப்பது ஏலவே தெரிந்த விடயம்.

வல்லைப்பாலத்தின் நிலைமை கைதடி மற்றும் நாவற்குழி பாலங்களில் இருந்த போது, அங்கும் கடும் விபத்துக்கள் நடந்தன.

இருந்தும் அதுவிடயத்தில் நடவடிக்கை எடுத்தன் காரணமாகப் பாலம் மாற்றியமைக்கப்பட, அவ்விடத்தில் நடந்த விபத்துக்கள் முழுமையாக நின்று போயின.

எனினும் வல்லைப் பாலத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற சிந்தனை சம்பந்தப்பட்டவர்களிடம் ஏற்படாமல் போனமைதான் மிகப்பெரும் துரதிர்ஷ்டம்.

இதேபோல வடபகுதியில் புகையிரதக் கடவைகள் பாதுகாப்பானதாக இல்லாமையால், நடந்த விபத்து மரணங்கள் கொஞ்சமல்ல.

ஆக, வடபகுதியில் விபத்து மரணங்களைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளை உடனடியாக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஆம், வட மாகாணத்தில் நடந்தாகின்ற வீதி விபத்துக்களால் ஏற்படுகின்ற மரணங்களின் எண்ணிக்கை மிகவும் கணிசமாக இருக்கின்ற தகவலை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும்.

மேலும் வீதி விபத்துக்கள் தொடர்பில் பொலிஸ் பொறுப்பதிகாரிகள், மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள், வீதி அபிவிருத்தி சார்ந்த அமைப்பினர், புகையிரத திணைக்களத்தினர், உள்ளூராட்சி அமைப்புகள், தனியார் வாகன சங்கங்கள், கனரக வாகன அமைப்புக்கள், ஓட்டோ சங்கங்கள், சாரத்தியப் பயிற்சி நிறுவனங்கள் என அனைத்துத் தரப்புகளையும் உள்ளடக்கிய மாநாடொன்றை நடத்தி; அவர்களின் ஒத்துழைப்பையும் பெற்று, வீதி விபத்துக்கள் ஏற்படாத வண்ணம் சாத்தியமான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

இதனை வடக்கு ஆளுநர் விரைந்து நிறைவேற்றுவார் என நம்பலாம்.

# கிடப்பிலுள்ள அனைத்து வழக்குகளும் மீள் விசாரணை செய்யப்படும்

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

இலங்கையில் கடந்த அரசாங்கங்களின் கீழ் இடம்பெற்ற குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மக்கள் ஆணை வழங்கியமையினால் அனைத்துக் குற்ற வழக்குகளும் மிக முக்கியமானவை எனப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவீ செனவிரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

தொக்கி நிற்கும் குற்ற வழக்குகள் தொடர்பில் கொழும்பு ஊடகத்தினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவீ செனவிரத்ன, கடந்த அரசாங்கங்களின் கீழ் இடைநிறுத்தி வைக்கப்பட்ட பிரசித்தமான கொலைகள், கடத்தல்கள் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் மீள் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளதாக ரவீசெனவிரத்ன தெரிவித்தார்.

அவர்களுக்கு இது தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள மேலதிக அதிகாரிகள் தேவையெனில், அவ்வாறான அனைத்து விடயங்களையும் பூர்த்தி செய்ய தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

நம்பிக்கையான ஒரு தீர்மானத்தை எதிர்பார்த்து பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதால் எந்தவொரு உயர்மட்ட அதிகாரியின் ஈடுபாடுமின்றி அந்த அனைத்து அதிகாரிகளுக்கும் தத்தமது கடமைகளை மேற்கொள்ளக்கூடிய சூழலை தற்போது உருவாக்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

அமைச்சர் விஜித ஹேரத் அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதோடு விசாரணைகள் உரிய முறையில் இடம்பெறுகின்றதா? என்பதையும் அவதானித்து வருவதாக முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவீ செனவிரத்ன வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## யானை தாக்கியதில் புத்தளத்தில் ஒருவர் பலி

(புத்தளம்)

புத்தளம் - புதிய எலுவாங்குளம் ஐலிய கிராமம் பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முந்தல் பகுதியைச்சேர்ந்த 65வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தோட்டமொன்றில் காவலாளியாக கடமை புரிந்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வண்ணாத்திவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பெண்ணின் சடலம் நுவரெலியாவில் மீட்பு

நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்தில் இருந்து அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம் ஒன்று நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்து நிலையத்தினுள் ஒருவர் இறந்து தரையில் கிடப்பதாக நுவரெலியா மாநகர சபை ஊழியர் ஒருவர் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபரும் அவருடன் இன்னுமொரு பெண்ணும் கடந்த 5 நாட்களுக்கு முன்பிலிருந்து நுவரெலியா பேருந்து தரிப்பிடத்தில் யாசகம் பெற்று வந்தவர்கள் என தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும், அதிக குளிர் காரணமாக இவர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில், சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## நீர் நிரம்பிய குழியில் மூழ்கிய மாணவன் பலி

(கொழும்பு)

கொடதெனியாவ ஹல் ஒலுவ கந்த பிரதேசத்தில் உள்ள நீர் நிரம்பிய குழியில் மூழ்கி மாணவன் ஒருவன் நேற்று முன்தினம் புதன்கிழமை (16) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வராதல, கொட்டதெனியாவ பிரதேசத்தில் வசிக்கும் 14 வயதுடைய பாடசாலை மாணவனே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவன் தனது 05 நண்பர்களுடன் இணைந்து நேற்று முன்தினம் புதன்கிழமை (16) மாலை நீர் நிரம்பிய குழியில் நீராடச் சென்றுள்ளார்.

இதன்போது, மாணவன் திடீரென நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடதெனியாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

ரூ.25 மில்லியன் பெறுமதியான

## ஐஸ் போதைப்பொருளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

25 மில்லியன் ரூபா பெறுமதியான ஐஸ்போதைப் பொருளுடன் இந்தியப் பயணி ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மலேசியாவில் இருந்து UL 315 என்ற விமானத்தில் வருகை தந்த இந்திய பிரஜை பயணப் பொதியில் புடவைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 01 கிலோகிராம் 'ஐஸ்' போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் மதிப்பு சுமார் ரூ. 25 மில்லியன் என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபரும் போதைப் பொருளும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் (PNB) ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ம-7)

## 15 நாட்களில் 63,000 சுற்றுலா பயணிகள் வருகை

(கொழும்பு)

இவ்வருடத்தில் ஒக்ரோபர் மாதத்தின் முதல் 15 நாட்களில் 63ஆயிரத்து 491 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து 18 ஆயிரத்து 78 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 4ஆயிரத்து 504 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 4ஆயிரத்து 495 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

மேலும், ஜேர்மனி, ரஷ்யா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, ஒக்ரோபர் மாதத்தில் ஒரு இலட்சத்து 55ஆயிரத்து 70 சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 15 இலட்சத்து 48 ஆயிரத்து 299 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்களில், 3 இலட்சத்து 4ஆயிரத்து 634 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்தும், 1 இலட்சத்து 40 ஆயிரத்து 959 சுற்றுலாப் பயணிகள் ஐக்கிய இராச்சியத்திலிருந்தும், 1இலட்சத்து 30ஆயிரத்து 701 சுற்றுலாப் பயணிகள் ரஷ்யாவிலிருந்தும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I

08

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

### ஒருங்கிணைந்த மக்கள் ஐக்கிய முன்னணியின் தோற்றம்

இத் தேர்தலில் போட்டியிடுவதற்கு திரு. எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் தலைமைத்துவத்தை ஏற்றிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் பிலிப் குணவர்த்தனா அவர்களினால் உருவாக்கப்பட்டிருந்த விப்லவக்காரி லங்கா சமசமாஜக்கட்சியும் கலாநிதி. டபிள்யூ. தஹாநாயக்க,சோமவீர சந்திரசிரி, டீ.பி.தென்னக்கோன் ஆகியோரால் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னராக அமைக்கப்பட்ட பாசாபெரமுன (சிங்கள மொழி முன்னணி) கட்சியும் மற்றும் ஐ.எம்.ஆர்.ஏ. ஈரியகொல்ல அவர்களின் சுயேட்சைக் குழுவினர் ஆகியோர்இணைந்து "ஒருங்கிணைந்த மக்கள் ஐக்கிய முன்னணி" (MEP-C) என்னும் கூட்டுக் கட்சியை ஏற்படுத்தியிருந்தனர்.

### சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் மூன்றாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் -1956

இரண்டாவது பாராளுமன்றம் 1956 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி கலைக்கப்பட்டபின் மூன்றாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான நியமனப்பத்திரம் 1956 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி கோரப்பட்டது.எல்.எம். டி த. சில்வா ஆணைக்குழுவின் எல்லை நிர்ணயத்தின்படியே இப் பாராளுமன்றத்தேர்தல் நடைபெற்றது. அதாவது இத் தேர்தலிலும் 95 பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய 89 தொகுதிகளில் வாக்களிப்பு நடத்தப்பட்டன. மிகுதி 6 உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

இத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி, ஒருங்கிணைந்த மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி, லங்கா சமசமாஜகட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஆகியவையும் சில சுயேட்சை (தொழிற் கட்சி, தமிழ் பாதுகாப்பு இயக்கம் போன்ற சிறிய கட்சிகள் உட்பட) அபேட்சகர்களும் தேர்தலில் போட்டியிட்டனர்.

இத் தேர்தலிலும் வழங்கப்பட்ட சின்னங்கள் அபேட்சகர்களுக்கே ஒழிய கட்சிகளுக்கல்ல. அபேட்சகர்களுக்கு சின்னங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் இத் தேர்தலில் பொதுவாக ஒரே சின்னத்தை தெரிவு செய்து பாவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இப் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 1956 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5,7,10 ஆம் திகதிகளில் (3 நாட்கள்) நடைபெற்றன. பல அங்கத்தவர் தொகுதிகளில் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குகளை அளிக்க அனுமதிக்கப்பட்டார்.

1956ஆம் ஆண்டுத் தேர்தலில் பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி 51 ஆசனங்களைப் பெற்று தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 8 ஆசனங்களே கிடைத்தன. பண்டாரநாயக்க இடதுசாரிக் கட்சிகளுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தை செய்துகொண்டதால் இடதுசாரிக் கட்சிகளுக்கு 17 ஆசனங்கள் கிடைத்தன. (லங்காசமசமாஜகட்சி 14 ஆசனங்கள். கம்யூனிஸ்ட் கட்சி 3 ஆசனங்கள்.)

இந்தத் தேர்தல் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் வெற்றிகரமான தேர்தலாக அமைந்தது. அதற்குக் காரணம் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் "சிங்கள-பௌத்த" தேசியவாதம் ஆகும். பண்டாரநாயக்கவினால் எழுச்சியுறச் செய்யப்பட்ட "சிங்கள-பௌத்த" தேசியவாதம், ஐக்கிய தேசியக் கட்சி தனது சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இருமொழிக் கொள்கையினின்று விலகி பண்டாரநாயக்கவின் "தனிச் சிங்களக" கொள்கையை தானும் ஏற்றமை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் ஐக்கிய தேசியக் கட்சியுடனான இணக்க அரசியல் என்பனவெல்லாம் சேர்ந்து தமிழ் மக்கள் இவற்றுக்கு மாற்றான தமிழ்த் தேசிய சக்தியாக, எஸ்.ஜே. வி.செல்வநாயகம் தலைமையிலான இலங்கை தமிழரசுக் கட்சியைத் தெரிவு செய்வதற்கு ஏதுவான காரணிகளாக அமைந்தன.

இத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மிகப்பெரியதொரு வெற்றியை ஈட்டியது. 14 வேட்பாளர்கள் போட்டியிட்டு 10 பேர் வெற்றியீட்டினர்.அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் ஜி.ஜி.பொன்னம்பலம் மட்டும் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெற்றி "சிங்கள-பௌத்த" தேசியவாதத்துக்கெதிரான தமிழ் மக்களது உரிமைக் குரலாகப் பார்க்கப்பட்டது.

இரு முஸ்லீம் உறுப்பினர்கள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் தெரிவானது குறிப்பிடத்தக்கது. நியமனம் செய்யப்பட்ட 6 பாராளுமன்ற உறுப்பினர்களில் இந்தியத் தமிழர்சார்பில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் நியமனம் செய்யப்படவில்லை.

தேர்தலில் படித்துக் கொண்ட பாடத்தால் பிரதமர் கொத்தலாவலை மரமேறிகளுடன் சமதையாக பாராளுமன்றத்தில் அமரவிரும்பவில்லை எனத் தெரிவித்துப் பாராளுமன்ற அமர்வுகளையே பகிஷ்கரித்திருந்தமை யாவரும் அறிந்ததே. அதன் பின், அவர் ஒரு போதுமே பாராளுமன்றம் சென்றதில்லை.

இலங்கையின அரசியல் பொருளாதார சமூக வரலாற்றிலே 1956ஆம் ஆண்டு தனியானதொரு முக்கியத்துவத்தினைப் பெற்றுக் கொண்டது. அந்த ஆண்டு இலங்கையின் பௌத்த மத வரலாற்றில் அதிமுக்கியத்துவம் பெற்ற ஆண்டாக காணப்பட்டது. புத்த ஜெயந்தி, பௌத்த விசாரணைக் குழுவின் அறிக்கை, பௌத்த மதத்தைப் புனரமைத்து அதற்குரிய இடத்தை வழங்க வாக்குறுதி அளித்த அரசியல் கட்சியின் தேர்தல் வெற்றி, பிரதான அரசியல் சக்தியாக பௌத்த சங்கம் எழுச்சி பெறல் என்பவற்றைக் குறித்த ஆண்டாக 1956ஆம் ஆண்டு விளங்கியது.

பெருமளவிலே, இன, மொழி, மத உணர்வுகளைத் தூண்டிவிட்டு அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான வழியைக் காட்டிய ஆண்டாகவும், சிங்கள பௌத்த பெரும்பாண்மை மக்களின் மேலாதிக்கம் ஏனைய சிறுபான்மை மக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட ஆண்டாகவும் அமைகின்றது. இனவாத அரசியலை வளர்ச்சிப்படுத்தியதன் மூலம் இலங்கையின் ஐக்கியம், ஒருங்கிணைப்பு, அபிவிருத்தி என்பவற்றிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வைத்த காலப்பகுதியின் ஆரம்பத்தையும் அது குறித்து நின்றது.

இலங்கையின் மூன்றாவது பாராளுமன்றத்தின் நாலாவது பிரதமராக எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டார நாயக்க தெரிவுசெய்யப்பட்டார். எதிர்க்கட்சித் தலைவராக டாக்டர். என். எம். பெரேரா தெரிவுசெய்யப்பட்டார். மூன்றாவதுபாராளுமன்றத்தின் மந்திரி சபையில் 14பேர் அமைச்சர்களாக இருந்தனர். இவ் அமைச்சரவையில் தமிழர்கள் எவரும் இடம்பெறவில்லை.

மூன்றாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் 1956ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகியது. தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்டு தமிழர்களதும் முஸ்லிம்களதும் அமோக ஆதரவுடன் கல்முனைத் தொகுதியில் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்ற எம்.எஸ் காரியப்பர் பாராளுமன்றம் சென்று ஆறு மாதத்தில் தமிழ் அரசுக் கட்சியை விட்டு விலகி அரசுடன் சேர்ந்து நீதி அமைச்சில் செயலாளர்/ கனிஷ்ட அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்டார்.

அதேபோல் தமிழ் அரசுக் கட்சியில் பொத்துவில் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற எம்.எம். முஸ்தபாவும் 1959இல் தமிழ் அரசுக் கட்சியை விட்டு விலகி அரசுடன் சேர்ந்து நிதி அமைச்சில் செயலாளர்/ கனிஷ்ட அமைச்சுப்பதவியை பெற்றுக்கொண்டார்.

தேர்தல் பிரச்சாரத்தில் அளித்த வாக்குறுதிக்கமைய பண்டாரநாயக்கவை பிரதமராகக் கொண்ட மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது பதவிக்காலத்தில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டது. அவற்றுள் சில: சிங்களமொழி அரசகரும மொழியாக மாற்றியது (1956), பஸ்சேவை (1958) மற்றும் கொழும்புத்துறைமுகம் (1958) தேசியமயமாக்கியது, தொழிலாளர் தினம் (மே தினம்) விடுமுறையாக்கப் பிரகடனம் செய்தது (1956), ஊழியர் சேமலாபநிதிச் சட்டம் (EPF) (1958) கொண்டுவரப்பட்டது, திருகோணமலை கடற்படைத் தளம் பிரிட்டிஷாரிடமிருந்து பொறுப்பேற்கப்பட்டது (1957), கட்டுநாயக்கவிலிருந்த விமானர் படைத்தளத்தை பிரிட்டிஷாரிடமிருந்து பொறுப்பேற்கப்பட்டது(1957) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### காலிமுகத்திடலில் சத்தியாக்கிரக போராட்டம் 1956-06-05.

தனிச் சிங்கள சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அன்றைய தினமே (1956 ஜூன் 5ம் திகதி) எஸ்.ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் சாத்வீக வழிகளில் பாராளுமன்றத்திற்கு முன்னே காலிமுகத்திடலில் 200 பேர் கொண்ட சத்தியாக்கிரகம் எனப்படும் அமைதி வழியிலான எதிர்ப்பில் ஈடுபட்டது.

அரசியல்கட்சிவேறுபாடுகளை மறந்து ஜி.ஜி.பொன்னம்பலம், சி.சுந்தரலிங்கம் ஆகியோரும் சத்தியாக்கிரகத்தில் இணைந்து கொண்டனர். காலி முகத்திடலுக்கு ஊர்வலமாக வந்த காடையர்கள் அங்கே சத்தியாக்கிரகம் இருந்த தமிழர்கள் மீது வன்முறைப் பிரயோகம் செய்து பலரைத் தாக்கினர். இவை நடந்தபோதும் பொலிஸ் துறை பார்வையாளராக நின்றதாக கூறப்படுகிறது.

வட்டுக்கோட்டை பா.உ. ஏ.அமிர்தலிங்கம், சாவகச்சேரி பா.உ. வி. என். நவரத்தினம், கோப்பாய் பா.உ. கு. வன்னியசிங்கம் போன்றோர் காயமடைந்தனர்.அன்று மாலை ஒரு மணியளவில் சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்புடன்...

லித்துறைப்பகுதியில் நீண்ட நாட்களாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுவருவதாக இரகசியத்தகவல் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றதன் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரின் வீட்டிலிருந்து 07 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர், சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (ம-7)

## இதுவரை...

மன்றத் தேர்தல் தொடர்பாக இதுவரை 257 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதில், வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)



















## 24 மணி நேரமும்...

வும் தீர்க்கப்படாத பிரச்சினைகளை 24 மணி நேரமும் அறிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இறக்குமதி...

வகையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்த வர்த்தகப் பொருட்களுக்கு வரி விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தப் புதிய விசேட வர்த்தக பண்ட வரி ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை அமுலாகும்.

இதன்படி, ஒரு கிலோகிராம் மைசூர் பருப்புக்கு 25 சதமும், மஞ்சள் பருப்புக்கு 25 சதமும் வரி விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு கிலோ கிராம் மாசி மற்றும் அதற்குப் பதிலான பொருட்களுக்காக 302 ரூபாய் விசேட வர்த்தக பண்ட வரி விதிக்கப்பட்டுள்ளது.

எலும்பு நீக்கப்பட்ட மீன் மற்றும் பிற மீனின் இறைச்சியைத் தவிர, புதிய அல்லது உறைந்த மீன்கள் ஒரு கிலோவிற்கு 10% அல்லது 400 ரூபாய் என்ற உச்சபட்ச வரிக்கு உட்பட்டுள்ளது. (ம-7)

## செலவழிக்கும்...

2023 இலக்கம் 3 எனும் தேர்தல் செலவினங்களை ஒழுங்குப்படுத்தும் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கான செலவு எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 21 நாட்களுக்குள் கட்சியின் செயலாளர், சுயேட்சைக் குழுத் தலைவர் மற்றும் வேட்பாளர் ஆகியோரின் கையொப்பம், சத்தியப் பிரமாண ஆணையாளர் அல்லது சமாதான நீதவானால் சான்றளிக்கப்பட்ட செலவு குறித்த ஆவணம், தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## பலன்கள்...

கத்தில் நேற்று நடைபெற்ற போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அதேபோல் கிராமிய அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது பெறுகைச் செயற்பாடுகள் ஒழுங்குமுறைக்கமைய முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், ஒரு சிலருக்கு மாத்திரம் ஒப்பந்தங்கள் கிடைப்பதற்கு மாறாக பிரதேச மற்றும் கிராமிய மக்களுக்குப் பலன்கள் கிடைக்கும் வகையில் குறித்த வேலைத்திட்டங்களைத் தயாரிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன் போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக மீளாய்வு செய்யப்பட்டதோடு, மத்திய அதிவேக வீதியின் மீரிகம கடவத்தைப் பகுதியை நிர்மாணிப்பது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பெருந்தெருக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் போது சுற்றாடல் பாதிப்புகள், நிதி பாதிப்புகள், பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் என்பவற்றை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை மட்டுப்படுத்தி வேலைத்திட்டங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டது.

மேலும் புகையிரத ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் புகையிரத தண்டவாள வேலைத்திட்டங்களை துரிதப்படுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். (ம-7)

## நிமோனியாக்...

ஆம் திகதி காய்ச்சல் காரணமாக வீட்டுக்கு வந்துள்ளார்.

இந்நிலையில் தொடர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த குறித்த குடும்பப் பெண் நேற்று அவரது இல்லத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் விசாரணைகளை மேற்கொண்டதோடு உடற்கூற்றுப்பரிசோதனைக்காக சடலத்தினை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்தினர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையில் குறித்த குடும்பப் பெண் நிமோனியாக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

## தேவை...

கம்பஹா பிரதேசத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

எதிர்த்தரப்பினர் கூறுவதை போல விசாரணை அறிக்கையை நினைத்தபடி வெளியிடுவதற்கு இது ஒன்றும் குழந்தைகள் வைத்து விளையாடும் பொம்மை அல்ல எனவும் விஜித ஹேரத் சாடியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை வெளியிடப்படாத இருஜனாதிபதி ஆணைக் குழுக்களின் அறிக்கைகளை ஏழு நாட்களுக்குள் வெளியிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் அவற்றை நான் வெளியிடுவேன் என கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பில தெரிவித்திருந்தார்.

அறிக்கையை வெளியிடுவதில் அரசாங்கம் ஏன் தயங்குகின்றது என்பதை அமைச்சர் விஜித ஹேரத் வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதில் வழங்கிய விஜித ஹேரத்,

ஒவ்வொரு தனிநபர் கோரிக்கையின் அடிப்படையில் அவற்றை வெளியிட முடியாது. பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், தங்கள் பணிகளைச் சரியாகச் செய்யத் தயாராக உள்ளோம்.

கம்மன்பில கூறுவதை போல் அவரின் அறிக்கைகள் தொடர்பில் தாம் கவலைப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

### க.பொ.த(உ/த) 2026 மாணவர் அனுமதி

க.பொ.த(உ.த) 2026 பிரிவுக்குரிய புதிய மாணவர்களின் அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 01.11.2024 என்பதனை அறியத்தருகின்றேன்.

திருமதி பி.சுகுமார்
SLPS III
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

(C-1407)


# ஒல்லாந்தர் காலத்து கேடயத்துடன் ஒருவர் கைது



(ஹட்டன்)

ஒல்லாந்தர் காலத்து VOC எழுத்து பொறிக்கப்பட்ட கேடயம் மற்றும் இரண்டு நாணயங்களை விற்பனை செய்ய வந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

20 இலட்சம் ரூபாவுக்கு ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்த கேடயம் மற்றும் இரண்டு நாணயங்களை விற்பனை செய்ய வந்த நபரை ஹட்டன் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

கினிகத்தேனை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயுடைய சந்தேக நபர், ஹட்டன் பிரதேசத்திலுள்ள ஒருவருக்கு 20 இலட்சம் ரூபாவிற்கு VOC கேடயம் மற்றும் இரண்டு நாணயங்களை விற்பனை செய்ய வந்துள்ளார்.

சந்தேகநபருக்கு கேடயம் மற்றும் இரண்டு நாணயங்கள் எவ்வாறு கிடைத்தன என்பது குறித்து சந்தேகநபர் எதுவும் கூறவில்லை எனவும், குறித்த நாணயம் மற்றும் கேடயம் தொடர்பான, தொல்பொருள் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக தொல்பொருள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஹட்டன் தலைமை பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார்.

VOC என்பது ஒல்லாந்தர் கால "கிழக்கிந்திய கம்பனி" எனும் பெயரைக் குறிக்கும் சுருக்கக் குறியீடாகும். இந் நாணயம் 1732 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது.

(ம-7)


## கணக்கீடு

A/L 2026 மூலஏடுகள்
ஆரம்பம் சனி(நாளை) 9 A.m
A/L 2025 பங்குடமை
ஆரம்பம் சனி(நாளை) 10 A.m
Paper Class
ஆரம்பம் திங்கள் 3 P.m

S.தவா
DCM யாழ்.நகர்
யா/வேம்படி மகளிர் கல்லூரி அருகில்
T.P : 077 239 5858
(2339)

## லைடன் புடவை நிலையம் யாழ்ப்பாணம்



எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் அனைத்து வகையான துணி வகைகள், ரெடிமேற் ஆடைகள், மகப்பேற்றுத் தாய்மார்கள், குழந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் மாணவர்களுக்கான சீருடைத் துணி வகைகள் போன்ற அனைத்து விதமான பொருட்களையும் 10% விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள்

10% 12.10.2024 - 30.10.2024

Leyden Textile Center
410, Hospital Road, Jaffna.
021 222 2381
(C-1411)

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)
(441)

## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.

50/= ~~80/=~~

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
077 773 0900
(442)

## சிறுநீரகம் தேவை

அவசரமாக $A^+$ வகை குருதியுடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது.
வயது எல்லை 25 - 40
தொடர்புகளுக்கு :
077 041 6405
Whatsapp
003161799 0096(ஹொலன்ற்)
(2333)

## நீங்களும் விரைவில் அமெரிக்காவில்...இன்னும் சில நாட்களே உள்ளன

### அமெரிக்க அதிஸ்ட விசா

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

55000 இலவச விசாக்கள்

0768226244

V2 TRAVELS

V2 Travels

0777469777 | 0743900350 | 0743900352 | 0768226237 | 0743900353 | 0743900351
0764550673 | 0768226240 | 0768226243 | 0777068777 | 0777720322 | 0764550675
0768226242 | 0768226238 | 0777726322 | 0764550674 | 0764550670 | 0777718322
0764550671 | 0776699892 | ஏனைய மாவட்டங்கள் 0768226236 | பருத்தித்துறை 0768226230 | 0776697950


## கடை வாடகைக்கு தேவை

Temple Road கைலாயபிள்ளையார் கோவில் அருகில் மற்றும் ஸ்ரான்லி வீதி ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் கடை வாடகைக்குத் தேவை.
077 957 0599
076 311 2055
(2336)

## Village Hotel Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
தொடர்புகளுக்கு :
077 544 8503
(2240)


## ஆறாம் ஆண்டு நினைவு



பிறப்பு 1987 . 08 . 23

இறப்பு 2018 . 10 . 18

### அமரர் மரியதாஸ் நிலோஸ்

சேவைகள் ஏற்ற செம்மலே,
தேவைகள் தீர்த்த தேவனே,
தீர்ந்து போன தேன்மொழியே,
விட்டுச் சென்றதேன் வான்வழியே!
பெறுதலுக்கரிய பொக்கிஷமே,
பொங்கிவரும் வைரமே,
இருள் அழித்த ஒளியே,
நிஜமாய் நீயில்லை இனியே!
துன்பம் துடைத்த தூயவனே,
இன்பம் இழைத்த இனியவனே,
பாசம் பழக்கிய பனிமலரே - இனி,
எங்களுக்கு உனைப்போல் யாருளரோ!
ஓய்ந்து விட்ட ஓவியமே!
கரைந்து விட்ட காவியமே!
வரைமுடியாத வளர்பிறையே - நீ
வாழுவாய், யேசுவோடு என்றுமே
ஆண்டுகள் ஆறாயினும் யாராலும்
ஆறுதல் அளித்திட முடியாத
பிரிவு அல்லவா உன் உன்னதமான உறவு.
ஆண்டவருடன் என்றும் வாழ - நீ
அடியார் வேண்டுகின்றோம்.

சென்தோமஸ் லேன்,
முனை, பருத்தித்துறை.

என்றும் உமக்காக செபிக்கும்
குடும்பத்தினர்

(C-1412)


## வெள்ளி முதல் ஞாயிறு வரை — X MARD — 18, 19, 20 10.2024

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs.379 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 999.00 Anchor 400g | Rs.249.00 ~~300~~ Fems 8 Pcs | Rs. 59.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1799.00 ~~2000~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2589.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 299.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1150~~ Anchor Plus |
| Rs. 149.00 ~~175~~ Santoor Soap | Rs. 439.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3355~~ Diabeta Plus | Rs. 379.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 ~~1150~~ 5kg Prima Wheat Flour | Rs. 3499.00 ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |

074 1011 345
மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)
(C-1413)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.